வாராந்த சஞ்சிகை
டிசம்பர் 02 - 08, 2015
# சுடர் ஒளி
பக்கம் 24
விலை 30/-

# உண்மைகளைத் தேடும் உயிர்க்கொடை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமண கேக்

தலைவடிவில் தயாரிக்கப்பட்ட கேக்கை கண்டு மணமகன் ஒருவர் அதிர்ச்சி யடைந்த சம்பவமொன்று அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலம் ஒஸ்டினில் இடம்பெற்றுள்ள திருமண வைபவத்தின்போதே இவ்வாறு தலைவடிவில் தயாரிக்கப்பட்ட கேக் பரிமாறப் பட்டுள்ளது. கேக் வடிவடிவமைப்பு கலைஞரான நடாலியா சிட்சேர்ப் (வயது - 28) இந்த கேக்கை வடிவமைத்துள்ளார். இதற்காக அவர் 40 மணித்தியாலங்களை செலவிட்டுள்ளார்.

மணமகன் மற்றும் மணமகள் ஆகியோரின் தலைகள் வெட்டப்பட்ட நிலையில் இந்தக் கேக் தயாரிக்கப்பட்டுள்ளது. அவை வெள்ளை மட்டை யொன்றின் மீது வைக்கப்பட்டுள்ளன. அதில் இரத்தம் வடிந்தோடுவது போன்று பார்வைக்கு மிகவும் குரூரமான முறையில் அந்த கேக் தயாரிக்கப்பட்டுள்ளது.

"இந்த கேக் வடிவமைப்பு தொடர்பில் நான் ஒருவருக்கும் கூறவில்லை. இது மிகவும் வித்தியாசமான முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த கேக்கை பார்த்தவுடன் திருமணத்திற்கு வந்த விருந்தினர்கள் அதிர்ச்சியடைந்த அதேவேளை, மிகவும் ரசித்தும் பார்த்தனர்' என கேக் தொடர்பில் சிட்சேர்ப் தெரிவித்துள்ளார்.

தனது பாட்டி இந்த கேக்கை ரசித்து பார்க்கவில்லை என்றும் ஆனால் தத்ரூபமாக அந்த கேக் வடிவமைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் தன்னை பாராட்டியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

'எனது கணவர் டேவிட் சிட்சேர்ப் (வயது 30) பயங்கரமான திரைப்படங் களை மிகவும் ஆர்வத்துடன் பார்ப்பார். நானும் இவ்வாறான கேக்கொன்றை தயாரிக்க வேண்டும் என்று ஆர்வத்துடன் இருந்தேன். விசேடமாக முகத்துடன் கூடிய கேக்கை தயாரிக்கவேண்டும்' என்று நினைத்திருந்தேன்.

இந்த கேக்கை பார்த்து எனது கணவர் மிகவும் அருமையாக உள்ளதாக என்னை பாராட்டினார்' என அப்பெண் மேலும் தெரிவித்துள்ளார்.

சீனாவில் குவாங்டாங் மாகாணத்தைச் சேர்ந்த 6 வயது சிறுவன் சிறுநீர் கழிப்பதில் மிகவும் சிரமப்பட்டான். எனவே அவனுக்கு அறுவை சிகிச்சை செய்ய வைத்தியர்கள் சிபாரிசு செய்தனர்.

நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய 'ரோபோ' மூலம் இந்த அறுவைச் சிகிச்சை நடத்த முடிவெடுக்கப்பட்டது. குவாங்கோ நகரில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அதை தொடர்ந்து திட்டமிட்டபடி அந்த சிறுவனுக்கு 'ரோபோ' அறுவை சிகிச்சை செய்தது, பிரமாண்ட திரைக்கு முன் அமர்ந்த வைத்தியர்கள் அங்கிருந்தபடி அறுவை சிகிச்சை தியேட்டரில் படுத்திருந்த சிறுவனுக்கு 'ரோபோ' மூலம் ஆபரேசன் செய்தனர்.

சுமார் 2 மணி நேரம் 20 நிமிடங்கள் நடந்த இந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. மருத்துவ உலகில் 'ரோபோ' மூலம் முதன் முறையாக இந்த அறுவை சிகிச்சை நடத்தப்பட்டுள்ளது.



# சிறுநீரக அறுவை சிகிச்சை



# 5 அடி உயரமான விநோத மிதி

பொழுதுபோக்கிற்காக 5 அடி உயரமான முன் சக்கரத்தையுடைய மிதி வண்டி ஒன்றைச் சீனாவைச் சேர்ந்த நபரொருவர் உருவாக்கி யுள்ளார்.

சீனாவின் ஹெபெய் மாகாணம் டாங்சன் எனும் ஊரைச் சேர்ந்த சாங் லியான்ஜன் என்பவரே இவ்வாறான விநோத மிதி வண்டியை உருவாக்கியுள்ளார்.

இந்த மிதிவண்டிக்காக இவர் 1,800 ஸ்ரேலிங் பவுண்டுகளை செலவளித்துள்ளார்.

இம்மிதிவண்டியில் பெரிய விளக்கு, வாகன ஒலிபெருக்கி, மற்றும் நான்கு சிறிய சக்கரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இவர் ட்ராக்டர் வண்டியின் 7 அடி உயரமான சக்கரத்தை இதற்கு பயன்படுத்தலாம் என திட்டமிட்டுள்ளார்.

ஆனால் அது பாரமாகவும் அதே நேரத்தில் செலுத்துவதற்கு கடினமானதாகவும் இருக்குமென எண்ணி சிறிய முன்சக்கரங்களை கொண்ட மண்வாரியொன்றை உருவாக்குவதற்கு எண்ணினார்.

எப்படியிருப்பினும் சக்கரங்கள் அளவில் வித்தியாசமானவை. அவை மிதி வண்டியை செலுத்துவதற்கு பொருத்தமானதாகவும் பாதுகாப்பானதாகவும் அமையும் என அவர் தெரிவித்துள்ளார்.

சீனாவை சேர்ந்த ஜியோலியன் என்பவருக்கு நெற்றியில் மூக்கு வளர்ந்துள்ளது. சீனாவை சேர்ந்த ஜியோலியன்(22) என்பவருக்கு கடந்தாண்டு ஏற்பட்ட சாலை விபத்தில் மூக்கில் பலத்த காயம் ஏற்பட்டது.

இதற்காக அவர் சரியான சிகிச்சை எடுத்துக் கொள்ளாததால் குருத்தெலும்பு முற்றிலுமாக சேதமடைந்து மூக்கு உருக்குலைந்தது.

இதனை மருத்துவர்களால் சரிசெய்ய முடியாத காரணத்தால் தோல் திசு வளர்ப்பு சிகிச்சை முறையில் புதிய மூக்கை உருவாக்க முடிவு செய்தனர். இதற்காக இடுப்பெலுப்பில் இருந்து எடுக்கப்பட்ட குருத்தெலும்பை பயன்படுத்தி ஜியோலியனின் நெற்றி பகுதியில் புதிய மூக்கு வளர்க்கப்பட்டது.

இது தற்போது முழு வளர்ச்சியடைந்துள்ளதாகவும், விரைவில் அகற்றப்பட்டு ஜியோலியனுக்கு பொருத்தப்பட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. -



# நெற்றியில் மூக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆசாத்

# உண்மைகளைத் தேடும் உயிர்க்கொடை

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன் இராஜேஸ்வரன் செந்தூரன் ஓடும் தொடருந்து முன்பு விழுந்து கடந்த 26 ஆம் திகதி தனது உயிரை அர்ப்பணித்துக் கொண்டான்.



குளிரூட்டப்பட்ட அறைகளில் உல்லாச வாழ்வைத் தாம் அனுபவித்துக் கொண்டு, அரசியல் கைதிகளைப் பல வருடங்களாகச் சிறையில் அடைத்துவைத்து அவர்களின் வாழ்வின் பெரும் பகுதியைத் நரகமாக்கிக் கொண்டிருக்கும் அதிகார பீடங்களைப் பொறுத்தவரை, இந்த மகத்தான உயிர்க்கொடை எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தி விடுமெனச் சொல்லி விடமுடியாது. மனிதாபிமானத்தை விட்டு வெகுதூரம் விலகி நிற்பவர்களது விழிகளை இந்த மனித உயிரிழப்பு திறந்துவிடப்போவதில்லை. ஏற்கனவே அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் மூலம் ஒவ்வொரு நாளும் சாவை நெருங்கிக் கொண்டிருந்த போதும் கூட, அவர்களின் கோரிக்கைகளை நியாயபூர்வமாக அணுக மறுத்து, ஏமாற்று முயற்சிகளை மேற்கொண்டவர்களிடம் செந்தூரனின் மரணம் எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்திவிடப் போவதில்லை.


> குளிரூட்டப்பட்ட அறைகளில் உல்லாச வாழ்வைத் தாம் அனு பவித்துக் கொண்டு, அரசியல் கைதிகளைப் பல வருடங்களாகச் சிறையில் அவர்களின் வாழ்வின் பெரும் பகுதியைத் நரகமாக்கிக் கொண்டிருக்கும் அதிகார பீடங்களைப் பொறுத்தவரை, இந்த மகத்தான உயிர்க் கொடை எந்த ஒரு மாற்றத்தையும் ஏற்படுத்தி விடுமெனச் சொல்லி விடமுடி யாது. மனிதாபிமானத்தை விட்டு வெகுதூரம் விலகி நிற்பவர்களுக்கு மனித உயிரிழப்பு விழிகளைத் திறந்துவிடப் போவதில்லை.

ஆனால் அந்த மாணவனின் உறவினர்கள் எவரும் அரசியல் கைதிகளாக இல்லாதபோதும், அவனுக்கோ அல்லது அவனது குடும்பத்துக்கோ எவ்வித அரசியல் பின்னணியும் இல்லாதபோதும், அவன் அரசியல் கைதிகளின் விடுதலை கோரி உயிரைத் தந்திருக்கின்றான் என்றால், இன ஒடுக்குமுறையின் கொடூரம் எவ்வளவு தூரம் அவனது நெஞ்சில் பெரும் கோபாக்கினியை மூட்டியிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

வரலாற்றில் எப்போதோ சில அரிய சந்தர்ப்பங்களில் மட்டும் இடம்பெறும் இத்தகைய ஒப்பற்ற அர்ப்பணிப்புத் தொடர்பாக, ஆட்சியாளர்களின் அணுகுமுறை தமிழ் மக்களை மேலும் சினமூட்டும் வகையிலேயே அமைந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் இரு முறைகளில் விசாரணைகளை மேற்கொண்டனர். ஒன்று, இந்த மாணவன் தொடருந்து முன்பு தானாகவே பாய்ந்தானா அல்லது வேறுயாராவது தள்ளிவிட்டார்களா என்பதைக் கண்டறிவது. கண்கண்ட சாட்சிகளின் அடிப்படையில் அவன் தானாகவே அந்த நடவடிக்கையை மேற்கொண்டான் என்பது உறுதி செய்யப்பட்டது.

அடுத்தது, அந்த மாணவனால் எழுதப்பட்ட கடிதம் அவனால் எழுதப்பட்டதா? அல்லது வேறு எவராலாவது எழுதிவிட்டு அங்கு கொண்டுவந்து போடப்பட்டதா? என்பதைக் கண்டறிவது என்பவையே அவையாகும்.




எப்படியிருப்பினும், அந்த மாணவனின் மரணம் உயிர்க்கொடை அல்லவெனவும், அந்த உயிர்க்கொடைக்காகக் கூறப்பட்ட நோக்கத்தை பொய்யாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஒரு உன்னதமான நியாயத்தைக் கொச்சைப்படுத்தவும், அதைத் திரிவுபடுத்தவும் ஒவ்வாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவர்களிடம் இந்த மரணத்தின் விலையாக நீதியையும், நியாயத்தையும் எதிர்பார்க்க முடியுமா? ஆனாலும், இந்த மரணம் ஏற்படுத்திய அதிர்வும், எதிர்காலத்தில் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளுமே அவர்களை இப்படியான முயற்சிகளில் இறக்கின என்பதை மட்டும் மறுத்துவிடமுடியாது.

வரவு செலவுத் திட்ட உரையின் போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இவ்விடயம் பற்றிக் குறிப்பிடுகையில் வெளியிட்ட ஒரு கருத்து மிக முக்கியமானதாகும். அதாவது இந்த மரணம் தமிழ் மக்களின் வெறுப்பையும், திக்கற்ற நிலைமையையும் வெளிப்படுத்துகிறது என அவர் தெரிவித்திருந்தார்.

2009 ஆம் ஆண்டு மே மாதம் முள்ளிவாய்க்காலில் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு

(22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கிரீடத்தை இழக்கும் கிரீஸ் 14

ஜி.எஸ்.எஸ்.

ஜூலை 12, 2015 அன்று ஐரோப்பிய யூனியனின் தலைவர்கள் கிரீஸ் பொருளாதாரத்துக்கு உதவ மீண்டும் ஒப்புக் கொண்டார்கள். கிரீஸ் ஐரோப்பிய யூனியனிலிருந்து வெளியேறாமல் பாதுகாக்கப்பட்டது.



பலவிதப் பொருளாதாரச் சீர்திருத்தங்களுக்கு கிரீஸ் ஒப்புக் கொண்டது. வரிவிதிப்பு, ஓய்வூதியத்துக்கான வயது மற்றும் அந்தத் தொகையில் பெரும் மாற்றம் போன்ற பல மாறுதல்கள் அறிமுகமாக உள்ளன.

ஜேர்மனி அளித்த அழுத்தம் காரணமாக ஐரோப்பிய யூனியன் வேறொரு நிபந்தனையையும் கிரீஸுக்கு விதித்தது. இதன்படி 50 பில்லியன் யூரோ மதிப்புள்ள கிரேக்க சொத்துக்கள் ஒரு புதிய சிறப்பு நிதிக்கு மாற்றப்படும். கடனை அடைப்பதற்காக மட்டுமே இந்த நிதி உருவாக்கப்பட வேண்டும்.

பதிலாகப் பிற ஐரோப்பிய நாடுகள் சுமார் 85 பில்லியன் யூரோ தொகையை கிரீஸின் பொருளாதார நெருக்கடியைச் சரி செய்ய அளிப்பார்கள். திரைமறைவில் வேறுபல நிபந்தனைகளுக்குக் கூட கிரேக்கப் பிரதமர் சிப்ராஸ் உடன்பட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. முக்கியமாகத் தனது இடதுசாரிக் கொள்கைகளை கிரேக்க அரசு கைவிட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருக்க வாய்ப்பு உண்டு.

கடந்த ஐம்பது வருடங்களாகவே நிதிச் சீர்திருத்தத்திற்கு கிரீஸ் முயன்றாலும் அது நடைமுறையில் ஏனோ அறிமுகப்படுத்தப்படவே இல்லை.

இந்த நிலையில் வேறொரு உள்நாட்டுக் குழப்பமும் கிரீஸில் சேர்ந்திருக்கிறது. அந்த நாட்டின் முன்னாள் நிதி அமைச்சர் யானிஸ் வரவுஃபகிஸ் என்பவர் மீது கிரிமினல் குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன. யூரோ மண்டலத்திலிருந்து வெளியேறுவதற்கு முன்னோடி போல இவர் ஒரு மாற்று நாணயத்தை அறிமுகப்படுத்தவிருந்தார் என்பதுதான் அது.

கிரேக்க வழக்கறிஞர் ஒருவர் இந்த முன்னாள் நிதி அமைச்சர் மீது அந்த நாட்டு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்.


முன்னாள் நிதி அமைச்சர் ஒரு மார்க்ஸியவாதி என்பதனாலோ என்னவோ ஐரோப்பிய மத்திய வங்கிக்கு எதிர் நிலையையே தொடர்ந்து எடுத்து வந்தார் என்பதை நிரூபிக்கப் போகிறார்களாம். போதாக்குறைக்கு தனது சிறு வயது நண்பர் ஒருவரை உதவிக்கு அழைத்துக் கொண்டாராம். அந்த நண்பர் இப்போது கொலம்பியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிபவர். என்ன உதவி? அரசின் கணினிகளை கொஞ்சம் மாற்றி அமைத்து பெரும் வரி செலுத்துபவர்கள் குறித்த விவரங்களை தான் பெற வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாம். நாட்டுக்குள்ளேயே ஓர் இணைப் பொருளாதாரத்தை நடத்த முயற்சி செய்திருக்கிறார்.


தேச துரோகம் எனக் குற்றம் சாட்டி என்னைத் தூக்கில் போடவும் வாய்ப்பு உண்டு. எல்லாம் இந்த ஐந்து மாத தவறான ஆட்சியின் விளைவுதான்" என்றும் இவர் கூறி இருக்கிறார். சென்ற மாதம் ராஜினாமா செய்தபோது நடந்ததை எல்லாம் அரசு அதிகாரிகளிடம் பகிர்ந்து கொண்டதாகவும், அவை நாட்டின் நலனுக்காகத்தான் என்றதாகவும் அவர் கூறுகிறார். சர்வதேச நிதியத்தின் மறைமுக தலையீட்டில்தான் தனக்கெதிராக வழக்கு தொடுக்கப்பட்டதாக அவர் கூறுகிறார்.

இன்னும் என்னென்ன ரணங்களை கிரீஸ் சந்திக்க வேண்டி இருக்குமோ! இப்போதைக்கு அந்த நாட்டு மக்கள், தங்கள் மீது சுமத்தப்பட்டிருந்த ஒரு தடை நீங்கியதற்காக பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதாவது தங்கள் ஏ.டி.எம். அட்டைகளையும், கடன் அட்டைகளையும் அவர்கள் பயன்படுத்தலாம்.

தேசமே மறைமுகக் கடன் அட்டைகளை'த் தடையில்லாமல் பயன்படுத்திக் கொண்டிருக்கும்போது மக்களை மட்டும் அது தடுத்துவிட முடியுமா என்ன?

(முற்றும்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விநோத குட்டி

மெக்ஸிகோவிலுள்ள ரேனோஸா மிருகக் காட்சிச் சாலையில் வரிக்குதிரையொன்றுக்கும் கழுதையொன்றுக்கும் இடையே இடம்பெற்ற அரிய இனக் கலவி மூலம் கழுதை போன்ற உடலையும் வரிக்குதிரை போன்ற கால்களையும் கொண்ட விநோத குட்டியொன்று பிறந்துள்ளது


ரேயஸ் என்ற பெண் வரிக்குதிரைக்கும் அருகிலிருந்த பண்ணையொன்றைச் சேர்ந்த இக்னேசிபோ என்ற கழுதைக்குமிடையில் ஏற்பட்ட இனக் கலவி மூலம் பிறந்த குட்டிக்கு கும்பா என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

உலகில் முதல் தடவையாக மனித குரல்நாணை ஆய்வுகூடத்தில் உருவாக்கி அமெரிக்க மருத்துவ நிபுணர்கள் சாதனை படைத்துள்ளனர்.

அமெரிக்க விஸ்கொன்ஸின் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவ ஆய்வாளர்கள் ஆய்வுகூடத் தட்டொன்றில் மனித கலங்களைப் பயன்படுத்தி இந்தக் குரல் நாணை விருத்தி செய்துள்ளனர். புற்றுநோய் மற்றும் ஏனைய நோய்களால் பாதிக்கட்டு தமது குரலை இழந்த பெருந்தொகையான மக்களுக்கு இந்தக் கண்டுபிடிப்பு வரப்பிரசாதமாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. புற்றுநோய் மற்றும் ஏனைய நோய்களால் பாதிக்கப்பட்டு 15 பேரில் ஒருவர் தமது குரலை இழப்பதாக மருத்துவத் தரவுகள் கூறுகின்றன.



# மனித குரல்நாண் செயற்கையாகக் கண்டுபிடிப்பு



# பிணங்களை அலங்கரிக்கும் விநோத கிராமம்

இறந்தவர்களின் சடலத்தை அடக்கம் செய்யாமல் வழிபட்டு வருவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. தீயில் கருகிய பிணங்கள் மம்மி போல் தொங்க விடுவது அங்கு வரும் சுற்றுலா பயணிகளிடையே பீதியை கிளப்பியுள்ளது. இங்கு இறக்கும் ஆண்கள் மற்றும் பெண்களின் உடலை வெட்டி மூங்கில் கம்பில் கருவாடு போல் தொங்கவிடுவர். அந்த சடலங்களில் இருந்து கொழுப்புகளை எடுத்து தங்களது உறவினர்களின் தோலிலும், முடி யிலும் தடவிக் கொள்கின்றனர்.

மேலும், சதை அழுகாமல் இருக்க உடம்பிற்குள் காற்று போகாமல் தடுக்க காது, கண், வாய், மூக்கு என அனைத்தையும் மூடிவிடுகின்றனர். இவ்வாறு செய்வதன் மூலம் இறந்தவர்களின் சக்தி தங்களுக்கு வருவதாக அப்பகுதியில் உள்ள கிராம மக்கள் நம்புகின்றனர். இது கிராம மக்களின் இடையே 200 வருடங்களாக நடந்து வரும் பாரம்பரியமாகும்.

மேலும் இந்தப் பிணங்களை விழாக்களின் போதும், சிறப்பு நாட்களிலும் எடுத்து வந்து அலங்காரம் செய்து வழிபட்டு வருகின்றனர். இந்த விநோத நிகழ்வு, பப்புவா நியூகினியாவில் உள்ள மோரோப் தீவில் தான் நடந்து கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
sudarolijaffna@gmail.com
361, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 492 7419

# பழமரக்கன்று உற்பத்தி வடக்கில் பெருகும் வாய்ப்பு

பாலும் பழமும் கைகளில் ஏந்தி ,பவள வாயில் புன்னகை சிந்தி என்ற சினிமாப்பாடல் ஐம்பதுகளின் முற்பகுதியில் மிகவும் பிரசித்தமானது. பாடலாசிரியர் கவிஞர் கண்ணதாசன், பாடியவர் டி.எம். சௌந்தரராஜன். தமிழ் மக்களது உணவு வகைகள் உடற்பலமும் மனப்பலமும் நல்குவனவாகவே அமைந்திருந்தன.

நோய் எதிர்ப்பு உணவை சீரணிக்க வைத்தல் மற்றும் உடற்பலத்தை சீராக்கும் வல்லமை கொண்டவை பழ வகைகள். மேற்கு நாடுகளில் அதிக சத்துக்களை கொண்ட கனிகளில் அப்பிள் பழமே முதலிடத்தைப் பெறுகிறது. அந்த இடத்துக்கு சமனாக எமது பிரதேசத்தின் கொய்யாக் கனியையும், வாழைப்பழத்தையும் கொள்ளலாம் என்று எமது முதியோர்கள் கூறுவதுண்டு.

பயிர்ச் செய்கைக்கு வழங்கப்படும் முன்னுரிமையை முக்கியத்துவத்தைப் போன்றே, பழ மரக் கன்றுகளை வளர்ப்பதற்கும் வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிட வேண்டும்.

அதற்கான திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஆரம்பக் கட்டம் மேலெழுந்து உள்ளது. குடாநாட்டின் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தினது, புன்னாலைக்கட்டுவன் விவசாய பண்ணையில் பழமரக் கன்றுகளை உற்பத்தி செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னேற்பாடுகள் முளைகொண்டுள்ளன.

பழ மரங்களை வளர்ப்பதில் ஆர்வமும், அக்கறையும் கொண்டவர்களுக்கு உதவும் வகையில், குடாநாட்டின் விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம், தனது புன்னாலைக்கட்டுவனில் அமைந்துள்ள விவசாயப் பண்ணையில், பழமரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பழமரக்கன்றுகளை தொடர்ச்சியாக உற்பத்தி செய்து பயனாளிகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் - ஆயத்தங்கள் செய்யப்படுவதாக அதன் பொது முகாமையாளர் தகவல் வெளியிட்டுள்ளார்.


மா,பலா, மாதுளை,கொய்யா, தேசி மற்றும் பழமரக்கூன்றுகளை உற்பத்தி செய்து விநியோகிக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

புன்னாலைக்கட்டுவனில் முன்னெடுக்கப்படும், எமது பிராந்தியத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவவல்ல, இந்தத் திட்டம் உரிய முறையில் வழிப்படுத்தப்பட்டால், எமது மக்களின் தேவைகளை நிறைவு செய்வதோடு பொருளியல் நிலையையும் உயர்த்தலாம்.

குடாநாட்டிலும், வடக்கின் ஏனைய பிராந்தியங்களிலும், பல பகுதிகளிலும் விற்பனை நிலையங்களை நிறுவி, காட்சி நிலையங்களையும் அமைத்தால் வியாபாரம் பெருகும்.

போலி வியாபாரிகள் எடுத்து வரும் தரம் குறைந்த பழமரச்செடிகளைக் கொள்வனவு செய்து ஏமாறாமல், சொந்தத்தில் எமது பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்படும் பழமரக்கன்றுகளை வாங்கி, எமது தேவையையும் பிராந்தியத்தின் பொருளாதாரத்தையும் உயர்த்துவோம்.

அதனை இன்றே செய்மின் நன்றே செய்மின்.





# ரஷ்ய விமானத்தை துருக்கி ஏன் சுட்டு வீழ்த்தியது?

சிரிய உள்நாட்டுப் போரின் புவிசார் அரசியல் போட்டியின் ஓர் அம்சமாக ரஷ்யாவின் SU-24 போர் விமானம் துருக்கியால் சுட்டு வீழ்த்தப் பட்டுள்ளது. துருக்கிய வான் பரப்பினுள் ரஷ்ய விமானங்கள் பறப்பதற்கு எதிரான ஆட்சேபனை 2015 செப்டம்பர் மாதம் ரஷ்யப் படையினர் சிரியாவில் இறங்கியதில் இருந்தே துருக்கியால் தெரிவிக்கப் பட்டுள்ளது. வெறும் வான் வெளி அத்து மீறல்களுக்காக மட்டும் ரஷ்ய விமானம் சுட்டு வீழ்த்தப் படவில்லை.

துருக்கிக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான புவிசார் ஆதிக்கப் போட்டி பல நூற்றாண்டுகள் நீண்டது. போல்கன் பிராந்தியம் முதல் கருங் கடல் வரை பரந்தது. ரஷ்யா கிறிமியாவைத் தன்னுடன் இணைத்ததில் உக்ரேனுக்கு அடுத்த படியாக அதிக அதிருப்தி அடைந்த நாடு துருக்கியே. கிரிமியாவில் வாழும் துருக்கி மொழி பேசும் 'டார்ட்டர்' சமூககத்தவர்களை ரஷ்யா நடத்தும் விதமும் துருக்கியை ஆத்திரமடைய வைத்தது. பல 'டார்ட்டர்' அறிஞர்களும் செயற்பாட்டாளர்களும் கிறிமியாவில் இருந்து நாடுகடத்தப் பட்டுள்ளனர். 1516ஆம் ஆண்டில் இருந்து 1923ஆம் ஆண்டுவரை சிரியா துருக்கியின் உதுமானியப் பேரரசின் ஆட்சியின் கீழ் இருந்த ஒரு நாடாகும். தற்போது உக்ரேனில் இருந்து ரஷ்யா பறிக்க முயலும் டொன்பாஸ் பிரதேசமும் துருக்கியின் ஆட்சியின் கீழ் இருந்த பிரதேசமாகும்.

சிரியாவில் 22 இலட்சம் முதல் 30இலட்சம் வரையிலான துருக்கியர்கள் வசிக்கின்றார்கள். கடந்த ஐம்பது ஆண்டுகளாக பல துருக்கியர்கள் அரபுக்காளாக மாற்றப்படுவாதால் உண்மையான துருக்கியர் தொகையை அறிய முடியவில்லை. சிரியாவில் முதல் படைக்கலப் போராட்டத்தை ஆரம்பித்தவர்கள் துருக்கியர்களே. 2011ஆம் ஆண்டு உருவான அரபு வசந்தத்தை ஒட்டி சிரியாவில் உருவான உள்நாட்டுப் போரை குர்திஷ் மக்களைப் போலவே சிரியாவில் வாழும் துருக்கியர்களும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கு துருக்கியிடமிருந்து படைக்கல உதவி பண உதவி கிடைக்கின்றன. 1st Coastal Division, 2nd Coastal Brigade and the Sham Brigade ஆகியவை சிரியாவில் வாழும் துருக்கியர்களுக்காகப் போராடும் முக்கிய அமைப்புகளாகும்.

சிரியாவில் உள்ள துருக்கியர்களில் அதிகமானோர் லதக்கியா மாகாணத்தில் வாழ்கின்றார்கள். அங்கு அதிபர் பஷார் அல் அசாத்தின் இனக் குழுமமான அலவைற் மக்களே பெரும்பான்மையினராகும். லதக்கியாவிலேயே ரஷ்யாவின் படையினர் போய் இறங்கியுள்ளனர். அங்கிருந்தே ரஷ்யப் போர் விமானங்கள் தாக்குதல்களில் ஈடுபடுகின்றன. ரஷ்யப் போர்விமானங்கள் ஐ எஸ் அமைப்பினர் மீது தாக்குதல் நடத்துவதிலும் பார்க்க சிரியாவில் உள்ள அமெரிக்கா ஆதரவுக் கிளர்ச்சிக்காரர்கள் மீதும் துருக்கியர்கள் மீதும் அதிக தாக்குதல்களை மேற்கொள்கின்றார்கள். இவர்கள் வசம் அமெரிக்காவின் தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் பல உள்ளன. இவை சிரிய அரச படையினருக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றன. அதனால் இந்த ஏவுகணைகளைக் கொண்ட இடங்களில் ரஷ்யா அதிக தாக்குதல்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேல்தர்மா



மேற்கொள்கின்றன. இதனால் பல அப்பாவி துருக்கியர்கள் சிரியாவில் கொல்லப்படுவது துருக்கிய மக்களை ஆத்திரப்படுத்துகின் றது . 2015 நவம்பர் 22ஆம் திகதி துருக்கியில் உள்ள ரஷ்யத் தூதுவரை அழைத்த துருக்கிய அரசு லதக்கியா மாகாணத்தில் வாழும் துருக்கியர்கள் மீது ரஷ்ய விமானங்கள் குண்டு வீசுவதற்கு தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது. பின்னர் 24ஆம் திகதி ரஷ்ய விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டது. வெறும் வான் வெளி அத்து மீறல் மட்டும் ரஷ்ய விமானம் சுட்டு வீழ்த்தப் பட்டதற்குக் காரணம் அல்ல.

சிரியாவில் உள்ள துருக்கியப் போராளிகளுக்கு அமெரிக் காவின் சிஐஏயும் ஆதரவு வழங்கி வருகின்றது. ஆனால் அசாத்தின் எதிரிகள் எல்லோரும் ஐ எஸ் அமைப்பின் ஆதரவாளர் களே என்பதே சிரியாவின் நிலைப்பாடு. ரஷ்யாவும் அதையே கருதுகின்றது. ரஷ்யாவிற்கு மத்தியதரைக் கடலில் உள்ள ஒரே பிடி சிரியாவாகும். அதை இழக்க அது விரும்பவில்லை. மத்திய தரைக்கடலில் ஒரு வல்லரசாக வேண்டும். சிரியாவில் இருந்தும் ஈராக்கில் இருந்தும் நிலப் பரப்புகளை அபகரிக்க வேண்டும் என்பது துருக்கி யின் நீண்ட நாள் கனவு.

துருக்கி சுட்டு வீழ்த்திய ரஷ்யாவின் எஸ்யூ-24 போர் விமானங்கள் 23மில்லி மீற்றர் துப்பாக்கிகள் மூன்று பொருத்தப்பட்டவை. அத்துடன் 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்குகளைத் தாக்கக் கூடிய நான்கு லேசர் வழிகாட்டி ஏவுகணைகளையும் கொண்டவை. தேவை ஏற்படின் தொலைக்காட்சி வழிகாட்டி ஏவுகணை களையும் எடுத்துச் செல்லக் கூடியவை. அதில் சிறந்த ரடார் வசதிகளும் உண்டு. இப்படிப் பட்ட ரஷ்ய விமானத்தை அமெரிக்கத் தயாரிப்பான F-16 விமானத்தைப் பாவித்து துருக்கி சுட்டு வீழ்த்தியுள்ளது. விமானத்தில் இருந்து இரு விமானிகள் பரசூட்டின் உதவியுடன் தரையிறங்க முற்பட்ட வேளையில் துருக்கிக்கு ஆதரவான சிரியக் கிளர்ச்சிக்காரர்கள் அவர்களில் ஒருவரை ஜெனிவா உடன்படிக்கைக்கு மாறாகச் சுட்டுக் கொன்றனர். மற்றவருக்கு என்ன நடந்தது என அறியச் சென்ற ரஷ்ய எம் ஐ - 17 உலங்கு வானூர்தி சிரியாவில் உள்ள துருக்கிய படையணியால் அமெரிக்கா வழங்கிய தாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

அமெரிக்காவின் F-16 போர் விமானங்கள் 1978 ஆம் ஆண்டில் இருந்து சேவையில் இருக்கின்றன. பல தடவைகள் இவை மேம்படுத்தப் பட்டன. The Fighting Falcon என்னும் குறியீட்டுப் பெயரால் அழைக்கப் படும் F-16 போர் விமானத்தை அதன் ஓட்டிகள் அது பாம்பின் தோற்றத்தில் இருப்பதால் அதை Viper என அழைக்கின்றனர். விமான ஓட்டிகளின் பார்வை வீச்சம் அதிக முள்ள இந்தப் போர் விமானத்தில் M61 Vulcan cannon என்னும் சுடுகலனும் 11 பல்வேறு தரப்பட்ட ஏவுகணைகள் பொருத்தக் கூடிய வசதியும் உண்டு. எல்லாக் காலநிலையிலும் செயற்படக்கூடிய F-16 எதிரி இலக்குகளை இலகுவாக அறிவதுடன் எதிரி விமானங்களையும் விரைவில் இனம் கண்டு தாக்கும் திறன் கொண்டது. புவியீர்ப்பு விசையின் எட்டு மடங்கு உந்து வலுவைக் கொண்டதால் இது மற்ற எல்லா விமானங்களிலும் பார்க்க மேன்மையானதாகக் கருதப்படுகின்றது.

ரஷ்யாவின் F-24 விமானம் மணித்தியாலத்திற்கு 1,315 கிலோ மீற்றர் வேகத்தில் பறக்கக் கூடியது. துருக்கியின் எல்லையை அண்மித்தவுடன் அதன் விமானி திசை திருப்பும் செய்கைகளைச் செய்ய முற்பட முன்னர் அது சில கிலோ மீற்றர்களைக் கடந்துவிடும். விழுத்தப் பட்ட விமானத்தின் வழிகாட்டி தனது விமானத்திற்கு எந்த வித எச்சரிக்கையும் விடப்படவில்லை என்றார். ஆனால் துருக்கி பத்துத் தடவைகள் எச்சரிக்கைகள் விடப்பட்டதாகச் சொல்கின்றது.






ரஷ்ய விமானத்தை அமெரிக்காவின் ஆசி இல்லாமால் துருக்கி சுட்டு வீழ்த்தியிருக்க மாட்டாது. சிரியாவில் உள்ள துருக்கியர்களின் நிலைகள் மீது ரஷ்யப் போர் விமானங்கள் அநியாயத்திற்குத் தாக்குதல் செய்கின்றன எனக் கருதும் துருக்கியர்களுக்கு இருக்கும் ஆத்திரத்தை அமெரிக்கா தனக்கு சாதகமாகப் பயன்படுத்தியுள்ளது எனக் கருத இடமுண்டு.

ரஷ்ய அதிபர் விளடிமீன் புட்டீனிற்கு ஒரு இழப்பீட்டைச் செய்வதன் மூலம் ரஷ்யர்கள் மத்தியில் அவருக்கு இருக்கும் செல்வாக்கைச் சரிக்க தக்க தருணத்தை அமெரிக்கா பார்த்துக் கொண்டிருந்தது. அதற்கு உரிய இடம் சிரியாவே.

ரஷ்யாவிற்குப் பக்கத்தில் உள்ள உக்ரேனில் செய்ய முடியாத ஒன்று தொலைவில் உள்ள சிரியாவில் வைத்துச் செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில் வளர்ச்சிக்கு அனுபவக்கல்வியே கைகொடுக்கிறது

ஒருவருக்குத் தொழில்ரீதியான வளர்ச்சியும் அதற்காக அவர் அவரது பணியைப் பற்றிக் கற்றுக் கொள்ளுவதும் 90 சதவீதம் அவர் செய்கிற வேலையில் தான் நடைபெறுகிறது. வேலை யின் அனுபவம் மூலமும், மற்றவர்களின் அனுபவங்களை உள் வாங்குதல் மூலமும் தனது பணிகளின் மீதான கருத்துகளை ஏற்றுக்கொள்வதிலும் தான் ஒருவருக்குப் பணி அனுபவம் கிடைக் கிறது. பொதுவாக, வேலையில்தான் பெரும்பாலும் மனிதர்கள் கற்றுக்கொள் கின்றனர். திறன் வளர்ப்புப் பயிற்சிகளில் சுமார் 10 சதவீதம்தான் கற்றுக்கொள்ளப்படுகிறது.

எல்லோருக்கும் ஒரே மதிப்பீடுகள் கிடையாது. சிலருக்கு அவர்களுக்கான தனிப்பட்ட நேரம் மிகவும் முக்கியம். அவர்கள் வார இறுதி நாட் களிலும் வேலை செய்யும்படி இருக்கிற பணிகளை விரும்பமாட்டார்கள். மன அழுத்தமுள்ள அபாயம் நிரம்பிய வேலைகள் சிலருக்குப் பிடிக்காது. அத்தகையவர் காவல்துறைப் பணி போன்ற பணிகளை விரும்பமாட்டார்கள். தொழில் வாழ்க்கைக்கான திட்டம் போடுவதற்கு முன்னதாக, தனக்கான மதிப்பீடுகளைப் பொறுத்துத் தனது பணிகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

**வாழ்க்கைத் திட்டம்**

இன்னமும் வேலைக்குச் செல்லாத இளம் வயதினராக இருக்கட்டும்; தற்போது ஒரு பணியில் செயல்படுபவராக இருக்கட்டும். அவர்களின் தொழில் வாழ்க்கைக்கு என்று தனியாகத் திட்டமிடுவது முக்கியமானது.

அப்படித் திட்டமிடும்போது நீங்கள் இப்போது எங்கே இருக் கிறீர்கள் என்பதையும் உங்களின் திறன்கள், ஆர்வங்கள் எதில் இருக் கின்றன என்பதையும் எவற்றை யெல்லாம் நீங்கள் முக்கியமான தாக மதிக்கிறீர்கள் என்பதையும் அது உங்களுக்குக் காட்டும்.

அத்தகைய திட்டமிடல் உங்களின் எதிர்காலத்தைப் பற்றித் திட்டமிடுவதற்கான கருவிகளை உங்களுக்குத் தருகிறது. உங்களின் எதிர்காலம் பற்றிய ஒரு தோற் றத்தையும் அது உங்கள் கண்முன் எழுப்பிக்காட்டும். உங்களுக்கான வேலை சமூகத்தில் கிடைக்கிற நிலைமையைப் பற்றியும் தற்போது நீங்கள் செய்கிற வேலையின் நோக்கங்களில் உங்களது ஈடுபாட்டின்மீதும் இந்தத் திட்டம் உங்களை அதிகக் கவனம் செலுத்த வைக்கும்.

**யார் பொறுப்பு?**

சரி இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு யார் பொறுப்பு?

உங்கள் மேல் அதிகாரி, கண் காணிப்பாளர், அல்லது கல்வி நிறுவனம் யாராக இருந்தாலும் அதற்கான வழிகாட்டலையோ அல்லது இந்தத் திட்டத்துக்கான சிறு ஆதரவையையோதான் தர முடியும்.

உங்களின் தொழில் வாழ்க்கை யின் வளர்ச்சிக்கான திட்டத்துக் கும் அதனைச் செயற்படுத்துவதற் கும் நீங்கள்தான் முழுப் பொறுப் பாளர். இத்தகைய திட்டமிடும் போது இதில் வரக்கூடிய தடை களையும் கணக்கில் கொள்ள வேண்டும்.

**உள்தடையும் வெளித்தடையும்**

என்ன மாதிரியான தடைகள் வரலாம் எனச் சிந்தித்துத் தடை களையும் சவால்களையும் முன்ன தாக அடையாளப்படுத்திக்கொள் வது மிகவும் சிறப்பு. எல்லா விதமான தடைகளையும் நாம் முன்னதாகக் கணித்துவிட முடியாது. ஆனாலும் ஓரளவேனும் கணிப்பதன் மூலம் தடைகளை எவ்வாறு கடப்பது என்பதைத் திட்டமிட்டுக்கொள்ளலாம்.

இத்தகைய தடைகளை உட்புறமானவை, வெளிப்புற மானவை எனப் பிரிக்கலாம். உங்களது நேரம், நிதி நிலைமை, உங்களின் நோக்கத்திலிருந்து உங்களைத் திசை திருப்பக்கூடிய காரியங்கள், உங்களது குடும்பத் தின் எதிர்பார்ப்புகளும் தேவை களும், உங்களைச் சுற்றியுள்ளோர் உங்கள் நடத்தைகளின் மேல் ஏற்படுத்தும் தாக்கங்கள், உங்கள் மீதான சமூகரீதியான தாக்கங்கள், குழந்தை பராமரிப்புக்கான ஏற் பாடுகளும் செலவும், மன அழுத் தம் தரக்கூடிய வேலை, கடினமா னதாக உள்ள தொழிலக உறவுகள், அமைப்புரீதியான மாறுதல்கள், நீங்கள் செய்யும் வேலையின் தன்மையில் தொடர்ந்து ஏற்படுகிற மாறுதல் கள், பொருளாதார சிரமங்கள், ஆகியவை வெளிப்புறமான தடைகள் என்கிறார்கள் உளவியலாளர்கள். உங்களது தொழில்வாழ்க்கையை மேலும் வளர்த்துச்செல்வதை இவை தடுக்கக்கூடும்.

செய்கிற காரியங்களைத் தள்ளிப்போட்டுக்கொண்டேயிருத் தல், பணியில் மிதமிஞ்சிய அளவுக்குக் கனகச்சிதமும் துல்லியமும் தேடுதல், வேலையில் அக்கறை குறைவாக இருத்தல், வேலையில் ஒரே குறியாக இருப் பதில் கவனமின்மை, மனச்சோர்வு, எப்போதும் கவலைப்படுதல், உறுதி குறைவாயிருத்தல், குறை வான சுயமரியாதை, நேர மேலாண்மையில் குளறுபடிகள், தங்களின் தொழில்வாழ்க்கை பற்றி உடனடியான தெளிவான முடிவு களை எடுக்காமை என்பன போன்ற தடைகளும் மனிதர்களி டம் உள்ளன. இவற்றை உள்புற மான தடைகள் என்கிறார்கள்.

**ஒரே ஒரு வேலைக்காகவா?**

ஒரு குறிப்பிட்ட வேலையைப் பற்றி மட்டும்தான் நாம் திட்டமிட வேண்டுமா? என்றும் சிலர் கேட்கிறார்கள்.

அவசியமில்லை. ஒரு வேலை யின் தன்மையை ஒட்டியதாக உள்ள பல்வேறுபட்ட வேலைகள் கொண்ட ஒரு தொகுப்புக்கும் நீங்கள் திட்டமிடலாம். வேறுபட்ட பல்வேறு வேலைகளுக்கும் ஒரேவகையான திறன்கள் தேவைப்படலாம். ஒரே தன்மைகொண்ட இத்தகைய பல்வேறு வேலைகளின் ஒரு தொகுப்போடு உங்களின் திறன்கள் பொருந்துமானால், அதற்குள்ளே பல வகையான வேலைகள் உங்களுக்குக் கிடைக்கலாம்.

இதற்கெல்லாம் ஏதேனும் ஒரு தேர்வு இருக்கிறதா என்று ஒரு ஆசிரியரிடம் ஒரு மாணவர் அப்பா வித்தனமாகக் கேட்டுள்ளார். இந்தி யாவைச் சேர்ந்த மனநல வைத்திய ரும் திறன்கள் பற்றிய ஆலோசகரு மான வைத்தியர் ஜிதேந்திரா நாக்பால் அப்படி எதுவும் கிடையாது என்கிறார்.

நீங்கள் அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்று சொல்லக் கூடிய, உங்களின் மிச்சமுள்ள தொழில்வாழ்க்கை யில் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று உடனடியாக உங்களுக்குச் சொல்லக்கூடிய மந்திர ஜாலத் தேர்வு எதுவும் கிடையாது என் கிறார் அவர். இங்கே விவாதிக்கப் படுகிற வழி முறைகளை இணைத்து அவற்றின் வழியாக ஒரு தீர்வை நீங்கள் உருவாக்கிக் கொள்ளலாம் அவ்வளவே. உங் களைப் பற்றிய ஒரு சுய மதிப்பீடே நீங்கள் எடுத்து வைக்க வேண்டிய முதல் படி.

ஒரு கல்வியாளரிடம் எனது நண்பரின் மகனுக்கு ஆலோசனை பெறச் சென்றோம். மேலாண்மைத் துறையா, பொறியியலா, மருத்துவமா எது நல்ல துறை என எனது நண்பர் கேட்டார்.

சாதிக்கவேண்டும் என்று நினைப்பவருக்குத் தேவையான உள்ளார்ந்த ஆற்றலை இந்த மூன்று துறைகளுமே தரும். இந்தத் துறைகளின் தற்போதைய நிலையை மாற்றக்கூடிய ஒரு ஆற்றலை உங்களுக்கு இந்தத் துறைகளே வழங்கலாம். ஒரு பொறியியல் மாணவர்தானே அப்துல்கலாம்? அவர் நாட்டின் குடியரசுத்தலைவராக ஆகும் அளவுக்கு தன்னை வளர்த்துக்கொள்ள வில்லையா?

மேலாண்மைத்துறையின் மாணவர் என்ற முறையில் பெப்ஸி, கோக்கோ கோலா போன்ற நிறுவனங்களின் தலைவராக ஆகலாம் என்ற கனவில் உங்கள் மகன் இருக்கலாம். ஆனால், இந்தத் துறைகளில் உள்ள ஆற்றலைவிட உங்கள் மகனின் தீர்மானகரமான உழைப்பும் மன உறுதியும்தான் அவரைப் பெரிய உயரங்களுக்குக் கொண்டு செல்லும் என்று தீர்ப்பு வழங்கினார் அவர்.

நீங்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?.

**- பிரம்மி**

**இன்னமும் வேலைக்குச் செல்லாத இளம் வயதினராக இருக்கட்டும்; தற்போது ஒரு பணியில் செயல்படுபவராக இருக்கட்டும். அவர்களின் தொழில் வாழ்க்கைக்கு என்று தனியாகத் திட்டமிடுவது முக்கியமானது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிரியும் நண்பரும் அவர்களே



பரபரப்பான கால்பந்து போட்டிக்கு இடையே பயங்கர சத்தங்கள் கேட்டபோது யாரோ பட்டாசு கொளுத்துகிறார்கள் என்றுதான் அரங்கில் இருந்த அத்தனைபேரும் நினைத்தார்கள்.

ஏன் அங்கிருந்த ஜனாதிபதி கூட அதனை பெரிதாக கணக்கில் கொள்ளவில்லை. மூன்றாவது வெடிப்பு நிகழ்ந்தபோதுதான் எல்லோரும் பரபரப்படைந்தனர்.

அருகில் இருந்த இசை மண்டபத்திலும் இதே கதை தான். மண்டபத்திற்கு நடுவில் கூட்டத்திற்கு மத்தியில் யாரோ சுடும்போது. இதுவும் இசை நிகழ்ச்சியின் ஓர் அங்கம் என்றே எல்லோரும் நினைத்தார்கள்.

அருகில் இருப்பவர்கள் துப்பாக்கி சூடு பட்டு இரத்தம் தெறிக்க கீழே வீழும்போதுதான் நிலைமையை உணர்ந்து உயிரை காத்துக்கொள்ள பின்னங்கால் பட ஓடினார்கள்.

பாரிஸ் நகரில் ஒரு வாரத்திற்கு முன்னர் பயங்கர தாக்குதல் இடம்பெற்ற போது அங்குள்ள மக்களின் மனநிலை இப்படியாகத்தான் இருந்தது. எம்மை இப்படியெல்லாம் கொடூர மாக யார் தாக்கப்போகிறார்கள் என்றே பாரிஸ் நகர மக்கள் நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

சரியாக செப்டெம்பர் 11 தாக்குதல் இடம்பெறும்போது அமெரிக்க மக்களின் மனோநிலையும் இப்படி யாகத்தான் இருந்தது. ஆனால் உண்மையை புரிந்துகொள்ளும்போது போதுமான அளவு பாதிப்புகள் அரங்கேறி இருந்தன.

செப்டெம்பர் தாக்குதலாக இருக்கட்டும் பாரிஸ் தாக்குதலாக இருக்கட்டும் மேற்குலகில் இடம்பெறும் இவ்வாறான தாக்குதல்களை கிளறிப் பார்த்தால் அதற்கு பின்னால் தன்னையே சுடும் தன்வினை இருப்பதை அவர்கள் புரிந்துகொள்ளாமல் இருந்திருக்கிறார்கள் என்றே எடுத்துகொள்ள வேண்டி இருக்கும்.

தீவிரவாதத்தை ஒழிக்கவெனக் கூறி மேற்குலகம் மத்திய கிழக்கில் கண்ட மேனிக்கு அத்துமீறல்களை நடத்துகிறது. அப்படியாவது தீவிரவாதத்தை ஒழிப்பார்களா என்று பார்த்தால் பதிலுக்கு பெட்ரோல் ஊற்றி நன்றாக வளர்க்கிறார்கள்.

அதாவது மேலோட்டமாக பார்த்தால் தீவிரவாதம் முளைக்கும் இடம் எல்லாவற்றிலும் அமெரிக்கா டேரா போட்டு ஆளில்லா விமானங்கள், போர் விமானங்கள், உளவாளிகள் அப்படியும் இல்லை என்றால் தனது சொந்த படையினரையே அனுப்பி தாக்குதல் நடத்துகிறது.

ஆனால் அமெரிக்கா சொல்லும் அந்த தீவிரவாதம் அழிந்த பாடில்லை. அதற்கு பதில் அந்த தீவிரவாதம் இன்னும் விகார மடைந்திருக்கிறது.

முன்னர் என்றால் அல் கொய்தா இருந்தது. அது இருந்து நின்று தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டு வேலையை பார்க்க போய்விடும். ஆனால் இப்போது இஸ்லாமிய தேசம் என்று தம்மை அழைத்துக் கொண்டு அட்டகாசம் புரியும ஐ.எஸ். குழுவை பார்த்தால் அல் கொய்தாவே மேல் என புரியும்; நினைக்கத் தோன்றுகிறது.

அமெரிக்கா அல் கொய்தாவை அழிக்க நினைத்து அதனை மேலும் விகாரமாக்கியதன் விளைவுதான் இந்த ஐ.எஸ். குழு. அடிப்படையில் ஒன்று சரியில்லை என்றால் மாற்றாக சரியான ஒன்றை கொண்டுவரவேண்டும். ஆனால் மேற்குலகின் தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தம் பிழைத்துப் போவதற்கு காரணம் இந்த சின்னஞ்சிறிய கோட்பாடாகும்.

அல் கொய்தா அல்லது ஐ.எஸ். போன்ற குழுக்களுக்கு மாற்றாக மத்திய கிழக்கு பிராந்தியத்தில் இருப்பது வெறுமனே சர்வாதிகார ஆட்சியாளர்கள் மாத்திரமாவார்கள்.

எப்படி அல் கொய்தாக்காரர்கள் சட்ட விரோதமாக அட்டூழியங்களை செய்கிறார்களோ அதனை இந்த சர்வாதிகாரிகள் சட்டம் இயற்றிக் கொண்டு செய்கிறார்கள்.

ஆனால் மேற்குலகம் இந்த சர்வாதிகாரிகளைத்தான் ஒரு மாற்றாக நினைத்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் மத்திய கிழக்கில் ஜனநாயகம் வருவதை அமெரிக்காவானாலும் சரி ஐரோப்பாவானா லும் சரி நுனி நாக்கால் மாத்திரம் பெரிதாக வரவேற்கும்.

மேற்குலகின் இந்த இரட்டை நிலைப்பாடு தான் ஐ.எஸ்ஸின் விகாரத் தோற்றத்திற்கு காரணம். இந்த இரட்டை நிலைப்பாட்டின் கதையை 1992ஆம் ஆண்டு அல்ஜீரி யாவில் இருந்து ஆரம்பிக்கலாம்.

அல்ஜீரிய பாராளுமன்றத் தேர்தலில் இஸ்லாமிய மீட்பு முன்னணி வெற்றி பெற்று ஆட்சி அமைக்க தகுதி பெற்றது. ஆனால் இராணுவம் தலையிட்டு வெற்றிபெற்ற இஸ்லாமியவாத கட்சியை நாட்டில் தடை செய்து அதன் உறுப்பினர்களையும் கைது செய்தது. மேற்குலகம் அப்போதுதான் ஆறுதல் அடைந்தது.

மத்திய கிழக்கில் ஜனநாயகம் இருக்கும் ஒரே இடம் என்று இஸ்ரேல் பெருமை பேசுகிறது. ஆனால் அந்த ஜனநாயகம் ஏனைய பிராந்திய நாடுகளுக்கு வருவதற்கு அதிகம் பயப்படுவதும் இஸ்ரேலாகும்.

மக்கள் விரும்பும் ஆட்சி வந்தால் அது இஸ்ரேல் எதிர்ப்பு ஆட்சியாகத் தான் இருக்கும் என்பது இஸ்ரேலுக்கு நன்றாகத் தெரியும். எனவே மத்திய கிழக்கில் ஜனநாயகம் பிறப்பதை எந்த தகிடுதத்தம் செய்தாவது தடுப்பதில் இஸ்ரேல் எப்போதும் கவனமாக இருக்கும்.

இதனைத் தெளிவாகச் சொல்வதற்கு வேறெங்கும் போகத் தேவையில்லை, பலஸ்தீன நிலத்தில் 2006இல் நடந்த தேர்தலையே உதாரணமாகக் காட்டலாம். அந்த தேர்தலில் இஸ்ரேலின் பரம எதிரியான ஹமாஸ் அமைப்புக்கு மக்கள் முண்டியடித்துக் கொண்டு வாக்களித்தார்கள்.

கடைசியில் ஹமாஸ் ஆட்சியில் இருக்கும் காசாவை முடக்கிய இஸ்ரேல், ஹமாஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கணக்கு வழக்கின்றி சிறையில் போட்டது. ஆனால் எப்போதும் ஜனநாயகத்திற்கு குரல் கொடுப்பதாகச் சொல்லும் மேற்குலகம் அப்போதெல்லாம் மௌனம் காத்தது.

ஐ.எஸ்ஸின் விகாரத் தோற்றத்திற்கு உடனடிக் காரணம் 2011இல் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் ஏற்பட்ட மக்கள் எழுச்சி போராட்டம்.

யாரோ தலைகால் புரியாதவர்கள் அதனை அரபு வசந்தம் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மக்கள் போராட்டத்திற்கு பின்னர் மக்கள் வீதிக்கு இறங்கிய எல்லா நாடுகளிலும் நிலைமை இன்னும் சீரழிந்தன.

அதாவது ஆர்ப்பாட்டம், போராட்டம் நடத்தியும் உருப்படியாக எதுவும் செய்ய முடியவில்லையே என்று பெரும்பான்மை மக்கள் தோல்வியை உணர்ந்த தருணம் அது.

பெரும்பான்மை ஷியா முஸ்லிம் களை கொண்ட பஹ்ரைனில் சுன்னி ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜனநாயகம் கேட்டு மக்கள் வீதிக்கு இறங்கினார்கள்.

ஆனால் மன்னர் அருகில் இருக்கும் சுன்னி நாடான சவூதியின் துருப்பி னரை அழைத்து வந்து ஆர்ப்பாட்டக் காரர் களை கொடூரமாக ஒடுக்கினார். கடைசி யில் மக்கள் தோல்வியோடு வீடுகளுக்கு திரும்பவேண்டியதாயிற்று.

எகிப்தின் நிலைமையை பார்த்தால் அதனை விடவும் மோசம். அங்கு ஆர்ப்பாட்டத்தின் மூலம் மூன்று தசாப்தங்கள் ஆட்சியில் இருந்த ஹொஸ்னி முபாரக் பதவி கவிழ்க்கப்பட்டது என்னமோ உண்மைதான்.

ஆனால் அதற்கு பின்னர் ஜனநாயகப்படி வெற்றி பெற்றவர்களை ஆட்சி செய்ய விடாமல் இடையில் இராணுவம் புகுந்து ஆட்சியை கைப்பற்றியது. கடைசியில் பார்த்தால் ஹொஸ்னி முபாரக் பரவாயில்லை என்னும் அளவுக்கு ஆட்சியை பிடித்த அப்துல் பத்தாஹ் அல் சிசி கொடூர மானவராக தெரிகிறார்.

லிபியாவிலும் மக்கள் போராட்டம் வெடித்து அது ஓர் ஆயுதப் போராட்டமாகவே மாறியது. ஆட்சியில் தொத்திக் கொண்டிருந்த முஅம்மர் கடாபி கொலை செய்து ஒரு முடிவு கட்டியபோதும் ஆயுதத்தை பிடித்தவர்கள் அதனை கைவிடாமல் அதிகாரத்திற்காக ஆளுக்கொரு முனை யில் இருந்து சண்டை பிடிக்கிறார்கள்.

கடாபியை துரத்த முண்டியடித்துக் கொண்டு வானில் இருந்து குண்டு போட்ட மேற்குலம் அதற்கு பின் உருப்படியாக ஜனநாயகத்தை ஏற்படுத்த ஒன்றும் செய்யவில்லை.

அரபு எழுச்சி போராட்டம் பிறந்த துனீஷியாவின் நிலைமை ஒப்பீட்டள வில் ஸ்திரமானது என்றபோதும் அங்கும் குழப்பத்திற்கு பஞ்சமில்லை.

மக்கள் ஆர்ப்பாட்டம் ஆட்சியில் இருந்த சைன் அல்.அபிதீன் பென் அலியை துரத்திய போதும் அதற்கு பின் ஏற்பட்ட ஜன நாயக அரசுக்கு தொடர்ந்து ஆட்சி செய்ய அரசியல் சூழல் சாதகமாக இருக்கவில்லை. இன்றும் அரசியல்

(22ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிம்மசொப்பனம் - 52

பாடிஸ்டா வழக்கம் போல் இதற்கும் தலையசைத்தார். உடனடியாக தேர்தல் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. அதாவது கம்யூனிஸ்ட்டுக்கள் இனி தேர்தலில் அதிகார பூர்வமாக போட்டியிட முடியாது. "ஐயா நீங்கள் ஆணையிட்டபடி செய்து முடித்து விட்டேன்" என்று பாடிஸ்டா அமெரிக்காவுக்குத் தெரிவித்த மறுகணமே பாடிஸ்டாவை அள்ளியெடுத்து உச்சி முகர்ந்த அமெரிக்கா, "இந்தா எடுத்துக் கொள்!" என்று சில நலத்திட்டங்களை க்யூபாவுக்கு வாரி வழங்கியது.

இந்தச் சம்பவங்களை கசப்புடன் உள்வாங்கிக் கொண்டார் காஸ்ட்ரோ. அவருடைய கவனம் வேறொரு விஷயத்தில் குவிந்திருந்தது. புரட்சிக்குழு. எதற்கும் அஞ்சாத வீரக்குழு. ஒழுங்கான இராணுவப் பயிற்சியளித்து தேர்ந்த வீரர்களால் ஆன குழு.

பெட்ரோ மிரட் என்பவர் காஸ்ட்ரோவின். இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வந்தார். ஆயுதங்கள் அவ்வளவாக இல்லாதது தான் பெரிய குறையாக இருந்தது. ஆனால், பயிற்சி கொடுப்பவருக்கும், பயிற்சி எடுத்துக் கொள்பவர்களுக்கும் தான் இது குறையாக இருந்ததே தவிர, காஸ்ட்ரோவுக்கு இது ஒரு பிரச்சினையாகவே தோன்றவில்லை. 'காவல்துறையினரும் இராணுவத்தினரும் எதற்காக இத்தனை ஆயுதங்களை வைத்திருக்கிறார்கள்? எண்ணெய் போட்டு பளபளவென்று யாருக்காகத் துடைத்து வைக்கிறார்கள், நமக்காகத்தானே!' என்று சொல்வார். அவர் கிண்டலாகச் சொல்கிறார் என்று தான் தோழர்கள் நினைத்தனர். ஆனால் காஸ்ட்ரோ கூறிய ஒவ்வொரு வார்த்தையும் உண்மை தான் என்று அடுத்தடுத்த நாள்களில் புரிந்து கொண்டனர்.

பண்டிகைக் காலம் தொடங்கியிருந்தது. கிறிஸ்து உயிர்த்து எழுந்த தினம். காஸ்ட்ரோ ஒரு காரை எடுத்துக் கொண்டார். ஓரியண்ட் மாநிலத்தை



நோக்கிப் புறப்பட்டார். சரி பிறந்த வீட்டு நினைவு வந்து விட்டது போலும் என்று தான் அனைவரும் நினைத்துக் கொண்டனர். ஆனால் காஸ்ட்ரோவின் முழுக் கவனமும் மொன்கடா இராணுவ முகாம் மீது தான். முகாமைச் சுற்றிச் சுற்றி வந்தார். யாரிடமும் பேசவில்லை. எதுவும் விவாதிக்கவில்லை. கவனமாக ஒவ்வொரு பகுதியையும் ஆராய்ந்து கொண்டே வந்தார். மொன்கடா இராணுவ முகாம் பலமான பாதுகாப்புக்கு உட்பட்டிருந்தது. சாண்டியாகோ நகரின் ஒதுக்குப் புறத்தில் உள்ளது இந்த முகாம். சுமார் பதினைந்து ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மொத்தம் இரண்டு நுழைவாயில்கள். ஒன்று மேற்குப் பக்கத்தில், மற்றொன்று கிழக்கில். இராணுவ அதிகாரிகளின் வீடுகள், பயிற்சித் தளம் எல்லாம் உள்ளே அமைந்திருந்தன. அவருடைய இலக்கு ஆயுதக்கிடங்கு!

மொன்கடாவுக்கு அருகே ஏதாவது இடம் கிடைக்குமா என்று ஆராய்ந்தார். அவர் எதிர்பார்த்த படியே ஓர் இடம் கிடைத்ததா? அது ஒரு விவசாயப் பண்ணை. சிறிய இடம் தான். அங்கிருந்து இராணுவ முகாம் பத்து மைல்கள் மட்டுமே.

## சொற்சிலம்பம் போட்டி இல. 701

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | | 5 | 6 |
| 7 | | | 8 | | | 9 | |
| | | 10 | | | 11 | | |
| | 12 | | | | | | 13 |
| 14 | | | | | | 15 | |
| 16 | | | 17 | | 18 | | |
| | | 19 | | | | | |
| 20 | | | | | 21 | | |

அனுப்புபவர் பெயர்:......................................................

விலாசம்:......................................................

......................................................

கையொப்பம்:......................................................

### மேலிருந்து கீழ்

1. விடியற்காலம்.
2. மழைமுகில்.
3. வரையப்படுவது.
4. கருவைச் சுமக்கும் நிலைமை.
5. திங்கள்.
6. மேடையை மறைப்பது.
8. வழங்கும்.
11. மனிதருக்கு உள்ளது. 32
12. உரம்.
13. கனவான்தனம்.
14. வான்.
15. ஒரு குறியீடு.
17. மேலதிக.
18. இளைய சகோதரன்.
19. மறைவில் தீட்டுவது.

### இடமிருந்து வலம்

1. ஒரு தமிழ் மாதம்.
4. இறுதிக்கிரியை.
7. கிறிஸ்தவர்கள் கடவுளை இப்படி குறிப்பிடுவர்.
9. நிலம்.
10. நேர்த்திசையில் மாற்றம்.
12. பரவுதல்.
14. நஞ்சு.
15. குளிர்மை.
16. சில பழ வகைகள் இவற்றைக் கொண்டிருக்கும்.
18. பூமி.
19. பிரதிக்ஞை.
20. மகள்.
21. சடலம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 701

சொற்சிலம்பம் போட்டி 701ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் 16 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே டிசெம்பர் 23 ஆம் மற்றும் டிசெம்பர் 30ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### போட்டி இல. 698இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | றோ.ஜெயக்குமார், கிறிஸ்தரசர் ஆலயம், கிளிநொச்சி. |
| 2 ஆம் பரிசு | செ.தவலிங்கம், தசபவனம், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. |
| 3 ஆம் பரிசு | யோ. விக்டர் அரவிந்தன், வல்லைவீதி, தொட்டிலடி, சங்கானை. |

பரிசுக்குரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் அலுவலக நேரத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தி யாழ். உதயன் அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தொடர்புகளுக்கு 021 567 7609 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 699க்கான விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 1.அவமதிப்பு. | 1.அபரிமிதம். |
| 2.படுக்கை. | 6.வடு. |
| 3.மிக. | 7.கரி. |
| 4.தரிசு. | 8.கல. |
| 5.தலம். | 9.மக்கு. |
| 8.கவலை. | 11.சுபாவம். |
| 10.குப்பி. | 13.திகைப்பு. |
| 12.பாதம். | 15.தலை. |
| 14.புத்திரி. | 16.பித்தம். |
| 17.தரி. | 19.புகை. |
| 18.கண்ணாடி. | 21.திரி. |
| 20.கைவரி. | 22.பண். |
| 24.வகை. | 23.விவரிப்பு. |
| 25.புள். | 26.பேரிகை. |
| | 27.புள்ளடி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறை சொல்தல் பெருங் குறை!



*நான் கடவுளின் முன்னால் நிற்கும் போது எனது வாழ்க்கைக் கான பதிலைத் தான் சொல்வேனே தவிர பிறருடைய வாழ்க்கைக் கான விளக்கம் அல்ல. எனவே, என்னுடைய குறைகளுக்காக மற்றவர்களைக் குறை சொல்வதில் எந்த அர்த்தமும் இல்லை.* **- ஜாய்ஸ் மேயர்.**

குறை சொல்லுதல் இன்றைக்கு ஒரு தொற்று நோயாகவே மாறிவிட்டது. ஒரு வகையில் மிகவும் எளிதான ஒரு வேலை குறை சொல்லுதல். எந்த விதமான தார்மீகப் பொறுப்பும் ஏற்க மறுப்பவர்களுக்கு மிக எளிதாகக் கிடைக்கக் கூடிய ஒரு விஷயம் குறை சொல்லுதல்.

சின்ன வயதிலேயே அது நமது இரத்தத்தோடு கலந்து விட்டது. ஓடிப் போவோம்; கல்லில் இடித் துக் கொள்வோம்; திட்டுவது என்னவோ அந்தக் கல்லைத் தான். இல்லையா ? சொன்ன பேச்சைப் பிள்ளைகள் கேட்க வில்லை என்றால் இப்போது கூட தொலைக்காட்சி யைத் தானே திட்டுகிறோம் !

ஒரு நிறுவனத்துக்கு ஒரு புது மேலதிகாரி வந்தார். அவரிடம் பொறுப்பை ஒப்படைக்கும்போது பழைய அதிகாரி மூன்று மூடப்பட்ட கவர்களைக் கொடுத்துச் சென்றார். எப்போதாவது பெரிய பிரச்சினை வந்தால் மட்டும் பிரியுங்கள் எனும் விண்ணப்பத்தோடு.

புதிய அதிகாரி பதவியேற்றார். ஒரு வருடம் சிக்கல் ஏதும் இல்லாமல் போனது ! போதாத காலம் முதல் சிக்தல் வந்தது. பணத் தட்டுப்பாடு. என்ன செய்யலாம் என யோசித்தபோது அவருக்கு மூடப்பட்ட கவர்களின் ஞாபகம் வந்தது. முதலாவது கவரைப் பிரித்தார். பழைய மேலதிகாரி மேல் பழியைப் போடு என்றிருந்தது ! அப்படியே செய்தார். தப்பித்தார். அடுத்த ஆண்டும் அதே போல் ஒரு பிரச்சினை. இப்போதும் கவரைப் பிரித்தார். கமிட்டி மீது பழியைப் போடு என்றிருந்தது ! அப்படியே செய்தார். அப்போதும் தப்பித்தார். மூன்றாவது ஆண்டும் பிரச்சினை வந்தது. பூதாகரமானது. மூன்றாவது கவரை எடுத்தார். பிரித்து வாசித்தார். மூன்று கவர்களை நீ உருவாக்கும் நேரம் வந்து விட்டது என்று எழுதப்பட்டிருந்தது !

**குறை சொல்லுதல் இன்றைக்கு ஒரு தொற்று நோயா கவே மாறிவிட்டது. ஒரு வகையில் மிகவும் எளிதான ஒரு வேலை குறை சொல்லுதல். எந்த விதமான தார்மீகப் பொறுப்பும் ஏற்க மறுப்பவர்களுக்கு மிக எளிதாகக் கிடைக்கக் கூடிய ஒரு விஷயம் குறை சொல்லுதல்.**

நகைச்சுவையாகச் சொல்லப்பட்டிருந்தாலும் இதில் இருக்கும் உண்மை நிதர்சனமானது. பழியைப் போடும் வழக்கம் ஆதியிலேயே ஆரம்பமாகிவிட்டது ! விலக்கப்பட்ட கனியைத் தின்ற ஆதாம் செய்த முதல் காரியம் பழியைத் தூக்கி ஏவாள் மீது போட்டது தான். எனவே இந்த பழிபோடலுக்கான விதை ஆதிமனிதனிடமிருந்து உருவாகியிருக்கிறது !

குறை சொல்வது மனிதனுடைய குறைபாடு ! அடுத்தவர்களை மட்டம் தட்டுவதன் மூலம் தனது உயரத்தை அதிகரிக்கச் செய்யும் முயற்சி இது. ஆழ்மனதில் உறைந்து கிடக்கும் நமது விரோதத்தின் வேர்களே இந்த குறையெனும் முட்களை விளைவிக்கின்றன.


பிடிக்காதவர்கள் மீது தான் குறையும், குற்றமும், விமர்சனமும் போர்த்தப்படுகிறது. உன் மேல எனக்கு அன்பு மிகவும் அதிகம். அதனால எப்போதும் குறை சொல்வேன் என்று யாரும் சொல்வதில்லை. அடுத்தவருடைய வளர்ச்சியோ, நிம்மதியோ, புகழோ, அழகோ மனசுக்குள் விதைக்கும் பொறாமை விதைகள் தான் பெரும்பாலும் குறைகளாய் முளை விடும். தன்னிடம் இல்லாத ஒன்றின் பள்ளத்தாக்கை நிரப்ப முயலும் மனதின் விகார முயற்சிகளில் இதுவும் ஒன்று.

குறை சொல்தல் பயத்தின் வேர்களிலிருந்தும் முளைப்பதுண்டு. குறிப்பாக அலுவலக சூழல்களில் தனது வேலையைத் தக்க வைத்துக் கொள்ளவும் , தங்களுடைய புரமோஷன், வளர்ச்சி போன்ற விஷயங்களுக்கும் அடுத்தவர்களை அழிக்கும் விமர்சனங்கள் எழுவதுண்டு.

ஈகோ எனும் ஆலமரத்தின் கிளைகள் இந்தக் குறை எனும் விழுதுகள். ஈகோ இருக்கும் மனிதர்கள் பிறரிடமுள்ள குறைகளை பூதக்கண்ணாடி கொண்டு பார்த்துத் திரிவார்கள். இல்லாததை இருப்பது போலச் சோடித்து மகிழ்வார்கள். ஈகோவை விலக்க வேண்டுமென முடிவெடுத்தால் இந்த கெட்ட பழக்கம் உங்களை விட்டுப் போய்விடும்.

குறை சொல்பவர்கள் தொடர்து குறை சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அட குறையைப் போக்கும் வழியைத் தேட வேண்டும் என்பதை மறந்து விடுவார்கள். இருப்பதில் திருப்தியடையாதவர்கள் குறை சொல்வதில் கில்லாடிகளாக இருப்பார்கள். தன்னை புத்திசாலியாகக் காட்டிக் கொள்ளவோ, அல்லது கவனத்தை இழுக்கவோ கூட பிறர் மீது சிலர் குறைகளை அள்ளித் தெளித்துக் கொண்டே இருப்பதும் உண்டு.

**“ குறை சொல்வது மனிதனுடைய குறைபாடு ! அடுத்தவர் களை மட்டம் தட்டுவதன் மூலம் தனது உயரத்தை அதிகரிக் கச் செய்யும் முயற்சி இது. ஆழ்மனதில் உறைந்து கிடக்கும் நமது விரோதத்தின் வேர்களே இந்த குறையெனும் முட்களை விளைவிக்கின்றன. ”**



**பிடிக்காதவர்கள் மீது தான் குறையும், குற்றமும், விமர்சனமும் போர்த்தப்படுகிறது. உன் மேல எனக்கு அன்பு மிகவும் அதிகம். அதனால எப் போதும் குறை சொல்வேன் என்று யாரும் சொல் வதில்லை. அடுத்தவருடைய வளர்ச்சியோ, நிம்மதியோ, புகழோ, அழகோ மனசுக்குள் விதைக் கும் பொறாமை விதைகள் தான் பெரும்பாலும் குறைகளாய் முளை விடும்.**

தாங்கள் இருக்கும் நிலைக்கு மக்கள் விடாமல் சூழலை குற்றம் சொல்லிக் கொண்டே இருக்கிறார் கள். நான் சூழ்நிலையை குற்றம் சொல்வதில்லை. சூழலைப் பிடிக் காத மனிதர்கள், தங்களுக்குப் பிடித்தமான சூழலை உருவாக்கக் கற்றுக் கொள்ளவேண்டுமே தவிர குறை சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது என்கிறார் ஜார்ஜ் பெர்னாட்ஷா ! அவருடைய வார்த்தைகளில் இருக்கும் வீரியம் கவனிக்கத் தக்கது!

குறை சொல்லுதல் வெறுமனே உங்கள் அலுவலக வாழ்க்கையை மட்டும் பாதிப்பதில்லை. உங்களுடைய ஆழமான குடும்ப வாழ்க்கைக்கே அது கொள்ளி வைத்து விடும். குறை சொல்வது ஒரு மிகப்பெரிய உறவு எதிரி !

கவனமாய் இருங்கள். குறை சொல்வதற்கான தருணங்களில் கவனமாய் இருங்கள். அந்தக் கவனம் உங்களில் எப்போதும் இருந்தால் படிப்படியாய் நீங்கள் குறை சொல்லும் குறையை விட்டு வெளியே வர முடியும். வாழ்க்கையும் ரொம்ப அழகானதாய்த் தெரிய ஆரம்பிக்கும்.

குறைகளைவோம், நிறை வடைவோம். **- சிரிப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேய் கதைகள் தேடும் ப்ரியாஆனந்த்!

வாமனன், எதிர்நீச்சல், வணக்கம் சென்னை, அரிமா நம்பி, இரும்புக்குதிரை, வை ராஜா வை என பல படங்களில் நடித்தவர் ப்ரியா ஆனந்த். இப்போது அவரது கைவசம் கூட்டத்தில் ஒருவன் என்ற படம் மட்டுமே உள்ளது. இப்படத்தில் தெகிடி அசோக் செல்வனுக்கு ஜோடியாக நடிக்கிறார் ப்ரியாஆனந்த். மேலும், இதுவரை நடித்த படங்களில் நடிப்புக்காக பேசப்படாத அவர், அரிமா நம்பி படத்தில் ஒரு பார் சீனில் சரக்கு அடிப்பது போன்று நடித்து சர்ச்சைக்குள் சிக்கினார். மற்றபடி பெரிய அளவிலான பரபரப்பு வளையத்திற்குள் அவர் வரவில்லை.

அதோடு, அவர் பெரிதும் எதிர்பார்த்த இரும்புக்குதிரை, வை ராஜா வை போன்ற படங்கள் தோல்வியடைந்ததால் அடுத்தபடியாக ப்ரியாஆனந்துக்கு வரவிருந்த படவாய்ப்புகள் வேறு நடிகைகள் பக்கம் திரும்பி விட்டன. அதனால் தற்போது கூட்டத்தில் ஒருவன் படத்தில் மட்டுமே நடித்து வரும் ப்ரியாஆனந்த், அடுத்து மூன்று ஹீரோயினிகளில் ஒருவராக நடிக்கவும் தயாராகி விட்டார். குறிப்பாக, தற்போது கோடம்பாக்கத்தில் பேய் சீசன் நடிப்பதால், பேய் கதைகளில் நடிப்பதில் தனது ஆர்வத்தை திருப்பியிருக்கிறார்.

அதனால் யாராவது பேய் படங்கள் எடுக்கிறார்கள் என்று கேள்விப்பட்டால் அவர்களை தொடர்பு கொண்டு சான்ஸ் கேட்டு வருகிறார்



# ஆண் ஆதிக்கம் இருப்பது தவறு அல்ல: அனுஷ்கா

பட உலகில் ஆண் ஆதி
அல்ல. சண்டைக் காட்சிகள
நடிக்கிறார்கள் என்று நடின
அனுஷ்கா அளித்த பேட்டி
பெண்களில் பலர் வெள
கொடுக்கிறார்கள். இதற்கா
கிடந்து உடலை வருத்துகி
இல்லை. மனதை அழகாக
நம்புகிறேன். வெளி அழக
கூடாது. மனம் அழகாக இ
அகத்தின் அழகே அழகு.
என் உயரத்துக்கு ஒல்
விரும்பியதை சாப்பிட்டு
செய்துகொள்ளலாம்.
இஞ்சி இடுப்பழகி பட
வேண்டும் என்பதற்காக
பிஸ்கட், ஐஸ்கிரீம் போன்
சாப்பிட்டேன்.இப்போது
விட்டேன்.
சண்டை காட்சிகளில்
கஷ்டங்களை பாகுபலி
உணர்ந்து இருக்கிறேன்
அவர்களுக்குத்தான் இ
சினிமாவில் ஆணாதிக்
தவறு இல்லை. என்னை
வருகின்றன. முதலில் அ
வருத்தப்பட்டேன். இப்
பக்குவப்பட்டு விட்டே
சிந்திக்கவில்லை அது
இவ்வாறு அனுஷ்கா


# நயன்தாரா சம்பளம் 3 கோடியா?

தமிழ்த் திரையுலகில் மட்டுமல்ல தென்னிந்தியத் திரையுலகிலும் வேறு எந்த ஒருவருக்கும் வழங்கப்படாத சம்பளம், நயன்தாராவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக திரையுலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. விக்ரமுடன் எந்தக் காலத்திலும் நடிக்க மாட்டேன் என்று சொன்ன நயன்தாரா, விக்ரமுடன் ஜோடி சேர்ந்தது எப்படி என்று திரையுலகே ஆச்சரியமாகப் பார்த்தது. அந்த ரகசியம் என்னவென்று தெரிந்து கொள்ளப் பலரும் முனைப்பு காட்டினர்.

நயன்தாராவைப் எப்போதுமே தன்னுடைய சம்பளத்தில் தெளிவாக இருப்பார். வேண்டாம் என்று சொன்னால் தவறாக நினைத்துக் கொள்வார்கள் என்பதால் சம்பளத்தை அதிகப்படியாகக் கேட்பாராம். அப்படிக் கேட்டால் அவர்களாகவே போய்விடுவார்கள் என்பதுதான் அதற்குக் காரணம். அப்படியும் சிலர் அந்த அதிக சம்பளத்துக்குச் சம்மதித்தால் நடித்துவிடுவாராம். ஏற்கனவே, இப்படியாக சில படங்களில் நடித்திருக்கிறார் என்கிறார்கள்.

விக்ரம் படத்துக்காகவும் அப்படித்தான் மறுப்பதற்காக சம்பளத்தை அதிகமாகக் கேட்கிறார். ஆனால், நயன்தாராவே ஆச்சரியப்படும் அளவுக்கு அந்த சம்பளத்தை அவருக்குக் கொடுக்க சம்மதித்திருக்கிறார் கள். அவ்வளவு சம்பளமா என ஆச்சரியப்பட்டு நயன்தாரா யோசிப்பதற்குள் அவரை நாயகியாக ஒப்பந்தம் செய்துவிட்டார்கள் தயாரிப்பாளர்கள் என்கிறது திரையுலகின் கிசுகிசு வட்டாரம். நயன்தாரா வுக்கான சம்பளம் மட்டுமே 3 கோடியாம். எத்தனை நடிகர்கள் அடுத்து சம்பளத்தை உயர்த்தப் போகிறார்களோ...?





# கவர்ச்சியாக படம் எடுத்து மிரட்டினார்: அன்சிபா ஹாசன்

கதாநாயகிக
மோதல் அவ்வப்
உலகில் பரபரப்
உண்டு. மிருகம்
சாமி தனது கன்ன
நடிகை பத்மப்ரிய
பிரச்சினையை கிள
நடவடிக்கை எடுக்
நையாண்டி பட
நடித்தபோது இயக்
ஆபாசமாக படம் எ
நடிகை [illegible]ரியா சர்
ஆவேசப்பட்டார். இ
காட்சியை நீக்கிவிட்
கொண்டு வந்தனர்.
கோடை மழை படத்
களஞ்சியம் தன்னை
புகார் கூறினார்.
நடிகை அஞ்சலி
படப்பிடிப்பில் இயக்கு
செய்து, அந்தப் படத்
நடிக்க முடியாது என்று
அதுபோல் நடிகை
ஹாசனும் தன்னை கவ
எடுத்து படக்குழுவினர்
தற்போது புகார் கூறியு
அன்சிபா ஹாசன் கூ
தமிழ் படங்களில் நல்ல
கதாபாத்திரங்களில் நடி
ஆசைப்பட்டேன். இதற்க
தேடினேன். சில படங்கள
செய்தேன். ஒரு படத்தில்
எனக்கு மோசமான அனு
ஏற்பட்டது. அந்த படத்து
கவர்ச்சியாக படம் எடுத்த
பாவாடையை அணிய வை
புகைப்படம் எடுத்தார்கள்.
நான் மிகவும் கவலையானே
என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண் ஆதிக்கம் நிறைந்து இருப்பது தவறு
க் காட்சிகளில் கதாநாயகர்கள் கஷ்டப்பட்டு
என்று நடிகை அனுஷ்கா கூறினார். நடிகை
த்த பேட்டி வருமாறு:-
பலர் வெளி அழகுக்கு முக்கியத்துவம்
ள். இதற்காக உடற்பயிற்சி, யோகாவே கதி எனக்
வருத்துகிறார்கள். இதில் எனக்கு உடன்பாடு
த அழகாக வைத்து இருப்பதைத்தான் பெரிதாக
வெளி அழகைப்பற்றி பெண்கள் கவலைப்படக்
அழகாக இருந்தால் முகத்தில் அழகு வரும்.
கே அழகு.
த்துக்கு ஒல்லி உடம்பு சரிப்பட்டு வராது.
சாப்பிட்டு கொஞ்சம் உடற்பயிற்சி
லாம்.
ப்பளகி படத்துக்கு குண்டாக இருக்க
ன்பதற்காக சாக்லெட், அரிசி உணவு,
கிரீம் போன்றவற்றை நிறைய
இப்போது அவற்றைக்குறைத்து

காட்சிகளில் ஆண்கள் படும்
பாகுபலி படத்தில் நான் நடித்து
இருக்கிறேன். ரசிகர் மன்றங்களும்
கத்தான் இருக்கிறது. எனவே
ஆணாதிக்கம் நிறைந்து இருப்பதில்
லை. என்னைப்பற்றி நிறைய கிசுகிசுக்கள்
. முதலில் அவற்றை பார்த்து
டேன். இப்போது அப்படி இல்லை.
விட்டே திருமணம் பற்றி
லை அது நடக்கும்போது நடக்கும்.
று அனுஷ்கா கூறினார்.


நயன்தாரா

தாநாயகிகள், இயக்குநர்கள்
ல் அவ்வப்போது தமிழ் பட
ல் பரபரப்பை ஏற்படுத்துவது
. மிருகம் படப்பிடிப்பில் இயக்குநர்
னது கன்னத்தில் அறைந்ததாக
பத்மபிரியா அழுது
னையை கிளப்பி அவர் மீது
க்கை எடுக்க வைத்தார்.
பாண்டி படத்தில் தனுசுடன்
பாது இயக்குநர் தனது இடுப்பை
ாக படம் எ து விட்டதாக
ரியா சர்ச்சையை கிளப்பி
பட்டார். இதனால் அந்தக்
நீக்கிவிட்டு படத்தை திரைக்கு
வந்தனர். நடிகை பிரியங்கா
மழை படத்தில் தன்னுடன் நடித்த
ம் தன்னை அடித்து விட்டதாக
னார்.
அஞ்சலி ஊர்சுற்றிப்புராணம்
ல் இயக்குநருடன் தகராறு
ந்தப் படத்தில் தொடர்ந்து
பாது என்று மறுத்து விட்டார்.
ல் நடிகை அன்சிபா
ன்னை கவர்ச்சியாக படம்
குழுவினர் மிரட்டியதாக
கார் கூறியுள்ளார்.
ஹாசன் கூறும்போது, நான்
ளில் நல்ல
களில் நடிக்க
ன். இதற்காக வாய்ப்பு
ல படங்களில் நடிக்கவும்
படத்தில் நடித்தபோது
ான அனுபவம்
ந்த படத்துக்காக என்னை
டம் எடுத்தனர். குட்டை
அணிய வைத்து
த்தார்கள். இதனால்
வலையாண்டதுள்ளேன்





# நடுவீதியில் தவித்த ஹன்சிகா

கடந்தவாரம் சென்னையில் மழை கொட்டித் தீர்த்த அன்று நள்ளிரவு ஹன்சிகா நடுரோட்டில் தவிக்கும் நிலை ஏற்பட்டது. இதுகுறித்து அவர் டுவிட்டரில் கூறி பதிவிட்டிருப்பவை....

கடந்த வாரம் இரவு 8 மணிக்கு சென்னை விமான நிலையத்தில் வந்து இறங்கினேன். அப்போது கொட்டித் தீர்த்த மழையை பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். இரவு 8.30 மணிக்கு விமான நிலையத்தில் இருந்து காரில் ஹோட்டலுக்கு புறப்பட்டேன். கார் மெதுவாக நகர்ந்தது.

இரவு 11.30 ஆன போதும் எனது கார் விமான நிலைய வீதியிலேயே நின்றது. அந்த அளவு போக்குவரத்து நெருக்கடி.

கார் ஒரு கிலோ மீற்றர் தூரம் கூட செல்லவில்லை. நேரம் நள்ளிரவைக் கடந்து விட்டது. காரிலேயே இருந்ததால் கால்கள் வலிக்கத் தொடங்கின. இனியும் காத்திருக்க விரும்பாத நான், காரில் இருந்து இறங்கி அருகில் உள்ள ஹோட்டலைத் தேடி மழையில் நனைந்தபடியே வீதியில் நடந்து சென்றேன்.

மழையால் சாலைகள் பாதிக்கப்பட்டு போக்குவரத்து முடங்கிய நிலையிலும், சென்னை மக்கள் என்னை அடையாளம் கண்டு கொண்டனர்.

சிலர் என்னை பெயர் சொல்லி அழைத்தார்கள். என் நிலைமையை புரிந்து கொண்டு நான் ஹோட்டலுக்கு செல்ல எனக்கு வழிகாட்டி உதவி செய்தனர். அந்த நள்ளிரவிலும் நான் பாதுகாப்பாக இருப்பதை உணர்ந்தேன். இரவு 1 மணிக்கு ஹோட்டலுக்கு சென்றுவிட்டேன்.


சென்னை எனது வீடு என்பது இதன் மூலம் உறுதியாகி விட்டது. என்னை தங்க ளில் ஒருத்தியாக நினைத்து மக்கள் என்மீது காட்டிய அன்பையும், பாசத்தையும் பார்த்து நெகிழ்ந்து விட்டேன். நகரமே வெள்ளத்தில் தவித்தாலும் பிறருக்கு உதவி செய்யும் மனதை அறிந்தேன்.

எனக்கு சென்னை மக்கள் இருக்கிறார் கள். என்பதை நினைக்கும்போது மகிழ்ச்சி யாக இருக்கிறது. இதுபோன்ற நேரங்களில் நானும் அவர்களுக்காக இருக்கிறேன். தமிழக மக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு எனது அன்பும், பிரார்த்தனையும் என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்சரும் மருத்துவமும்

- க.திருத்தணிகாசலம்-




இன்றைய பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் 'அல்சர்' ஒரு அன்றாட பிரச்சனையாக மாறிவிட்டது. ஜீரணமண்டலத்தில், அல்சர் எனும் புண்களை, அவை எந்த இடத்தில் உண்டாகின்றன என்பதை பொறுத்து. வாய்ப்புண், உணவுக்குழாய் புண், வயிற்றுப்புண், சிறுகுடலின் முன்பகுதி புண் என்று பிரிக்கலாம்.

வாயிலும். உணவுக்குழாய்களிலும் ஏற்படும் அல்சருக்கு முக்கியகாரணம் வயிற்றிலிருந்து உணவுக்குழாயுக்கும், வாய்க்கும், அமிலம் ஏறிவிடுவது தான் இரப்பை (வயிறு)க்கும், உணவுக் குழாயுக்கும், நடுவே ஒரு ஒரு வழி வால்வு உள்ளது. இது வயிற்றிலிருந்து எதுவும் மேலேறா வண்ணம் பார்த்துக் கொள்கிறது. பலருக்கு இந்த வால்வு சரியாக செயல்படாது. இதனால் ஜீரணச் சாறு மேலேறிவிடுகிறது. இதைத்தான் 'எதுக்கலிக்கிறது' என்கிறோம். வாயில் பித்த நீர் கரிப்பது போன்ற புளிப்புணர்ச்சி தோன்றும். ஒரு வழி வால்வு தளர்ந்து போனால் இந்த மேலேறும் அமிலப் பிரச்சனை. வால்வு கெட்டியாகி விட்டால் மூடிக் கொண்டே இருக்கும். இதைதிறப்பது கடினமாகிவிட்டால், உணவுக் குழாயிலிருந்த உணவு, வயிற்றுக்குள் செல்லாது. உணவுக்குழாயின் சுவர்கள் வயிறு, குடல் போன்றவற்றின் சுவர்கள் போல, அமிலத்தை தாங்கும் சக்தியுடையவை அல்ல. எனவே அவை சிவந்து, கன்றிப்போய் புண்ணாகி விடுகின்றன. குறிப்பாக உணவுக் குழாயின் கீழ்பாகத்தில் இவ்வாறான பாதிப்பை அதிகம் ஏற்படும். அமிலம் இன்னும் மேலேறி வாய்ப்புண்களை உண்டாக்கி, குரல் வளையத்தையும் தாக்கலாம். குரல் இழபபு, மாறுதல் ஏற்படலாம். ஏன், அமிலம் மூச்சுக்குழாயை கூட தாக்கி, நுரையீரலில் தொற்று நோயை உண்டாக்கலாம்.

உணவுக் குழாய் இந்த அமிலத் தாக்குதலை சமாளிக்க, வயிற்றின் சுவர்களின் திசுக்கள் போலவே, தனது செல்களை மாற்றிக்கொள்ள முயலும். இதை 'மெட்டப்பிளாசியா' என்பார்கள். இந்த திசுக்களை மாற்றும் முயற்சி, புற்றுநோயாக, அடினோ கார்சினோமா மாறுகிறது.

இதைத்தவிர்க்க:-

இப்போது வயிறு, குடல்களில் ஏற்படும் அல்சரைப்பற்றி தெரிந்து கொள்வோம் பொதுவாக, வயிற்றில், குடலில் ஏற்படும் புண்களை பெப்டிக் அல்சர் என்பார்கள். மருத்துவமொழியில் பெப்டிக் அல்சர் என்றால், வயிறு, சிறுகுடல் சுவர்களின் 'ம்யூகோஸா' படலத்தை, ஜீரண சாற்றில் உள்ள அமிலம், பெப்சின் சிதைத்து அழிப்பது. பெப்டிக் அல்சர்கள் வயிற்றில் (இரப்பையில்) உண்டானால் 'கஸ்ட்ரிக் அல்சர்' என்றும், சிறுகுடலின் முன் பகுதியில் ஏற்பட்டால் 'டியோடினல் என்றும் குறிப்பிடப்படும் பெப்டிக் அல்சர் என்ற வார்த்தை வயிற்றில் ஏற்படும் புண்களை குறிப்பதற்கும் உபயோகப்படுத்தப்படுகிறது.

**காரணங்கள்**

1. குடலில் மேற்பரப்பின் உள்ள மியூகோஸா படலம் என்ற சவ்வு நாள்பட்ட, எரிச்சல் உண்டாக்கும் அதிக அமில சுரப்பினால் பாதிக்கப்பட்டு, அங்கங்கே சிதைந்து விடும். அதிக அமில சுரப்பு மற்றும் பெப்சின் (ஜீரண என்சைம்) சுரப்பினாலும், காரமான மசாலா மற்றும் பொரித்த உணவுகளாலும் புண்கள் தோன்றும். வயிற்று 'லைனிங்கில்' ஓட்டை ஏற்பட்டு புண்கள் உருவாகும்.

2. முக்கிய காரணம்

அவசரம், பதற்றம், கவலை, பொறாமை, காரசாரமான உணவு, மசாலா அதிக அமிலத்தை சுரக்க வைத்து புண்களை உண்டாக்கும்.

3. வயிற்று 'அல்சர்'களை தோற்றுவிக்கும் இன்னொரு முக்கிய காரணம் 'ஹெலிகோபேக்டர் பைலோரி' என்ற ஒரு வகை பாக்டீரியா. இவற்றை கண்டறிந்த மார்ஷல் மற்றும் வாரன் என்ற வைத்தியர்களுக்கு 2005 இல் 'நோபல்' பரிசு வழங்கப்பட்டது. இந்த பாக்டீரியா அசுத்தமான சூழ்நிலை, குடிநீர், உணவுப்பொருள்களால் பரவுகிறது. வயிற்ற மிலத்தை நீர்க்கவைத்து, கேஸ்ட்ரைடீஸ் எனும் வீக்கத்தை உண்டாக்கி, நாளடை வில் இந்த கேஸ்ட்ரைடீஸ், அல்சராக மாற இந்த எச். பைலோரி கிருமிகள் உதவுகின்றன.

4. அதிக அளவு மது அருந்துதல், புகைபிடித்தல்.

5. தவறான உணவுப்பழக்கங்கள், நேரம் காலமின்றி உண்பது, அசுத்தமான பழக்கங்கள், கைகழுவாமல் உணவு உண்பது, நகத்தை கடிப்பது.

6. அதிக் தேநீர், கோப்பி குடிப்பது.

7. அஸ்பிரின் போன்ற மருந்துகள்

8. ஸ்ட்ரெஸ், மனஅழுத்தம் மனபரபரப்பு அடிக்கடி உணர்ச்சி வசப்படுதல்.

**அறிகுறிகள்**

இரப்பை (வயிறு) அல்சர்-

1. வயிற்றெரிச்சல் (நெஞ்செரிச்சல்), வயிறு மந்தம், வாயுக்கோளாறு.

2. அஜீரணம், வயிறு உப்புசம்

3. வயிற்றில் மேல்புறத்தில் வலி அல்லது சங்கடம். சாப்பிட்டால் வலி உண்டாகும்

4. வாந்தி, ஏப்பம், குமட்டல்.

5. மேல்வயிற்று வலி அல்சரின் முக்கிய அறிகுறி, இது இல்லாமலும் அல்சர் உருவாகலாம்.

டியோடினல் அல்சர்

1. நெஞ்செரிச்சல், வாயுக்கோளாறு

2. வலி- வயிறு காலியானால் ஏற்படும். சாப்பிட்டவுடன் வலி குறையும்

3. அஜீரணம்

4. வாந்தி அநேகமாய் இருக்காது.

5. மேல்வயிற்று வலி அல்சரின் முக்கிய அறிகுறி, இது இல்லாமலும் அல்சர் உருவாகலாம்.

இரப்பை அல்சர் இருபாலருக்கும் ஏற்படும். டியோடினல் அல்சர் ஆண்களை அதிகம் தாக்கும். டியோடினல் (சிறுகுடலின் முன்பாகம்) அல்சர், வயிற்று அல்சரை விட, அதிகமாக காணப்படுகிறது.

**அல்சர்களால் ஏற்படக்கூடிய சிக்கல்கள்**

1. அல்சர்களை தொடர்ந்து சிகிச்சைகளின் மூலம் குணப்படுத்தலாம். சில சமயங்களில் அல்சர்கள் வயிறு/ சிறுகுடல் சுவர்களை ஊடுருவி உட்சென்று அடுத்த அவயங்களை (கணையம், கல்லீரல்) பாதிக்கும். இதனால் தீவிரமான வலி ஏற்படும்.

2. அல்சர்கள் வலியில்லாவிட்டாலும், உதிரப்போக்கை உண்டாக்கும். இரத்த வாந்தி அல்லது கருநிறமலம் ஏற்படும்.

3. அல்சரை சுற்றியுள்ள திசுக்கள் வீங்கி, வயிறு/சிறுகுடல் பாதையை அடைக்கும். சாப்பிட்டவுடன், வயிறு மிகவும் கனமாகவும், உப்புசமும் இருந்தால் இந்த மாதிரி அடைப்புக்கு அறிகுறிகள்.

**சிகிச்சை**

1. குளிர்ந்த பால் குடிப்பது வலியைக் குறைக்கும். வயிற்றெரிச்சலை போக்கும்.

2. உங்கள் உணவில் நெய் சேர்த்துக் கொள்ளவும். நோயாளிக்கு நெய் ஜீரணமாகவிட்டால் வெந்நீருடன் சேர்த்து கொடுக்கவும்.

3. இரண்டு மூன்று வாழைப்பழங்கள் பாலுடன் கொடுத்தால் நல்லது. வாழைப்பழம் அதிக அமிலத்தை சரிப்படுத்தும். மஞ்சள் வாழைப்பழத்தை விட பச்சை வாழைப்பழம் சிறந்தது.

4. நெல்லிக்காய் சாறை சர்க்கரையுடன் சேர்த்து குடிக்க பலனளிக்கும்.

5. வில்வ இலைகள்/பழங்கள் - இவற்றை சேர்த்து கொண்டால் வயிற்றுப்புண்கள் குணமாகும்.

6. 250 கிராம் முட்டைக்கோசை 500 மி.லீற்றர் தண்ணீரில் கொதிக்க வைக்கவும். தண்ணீர் பாதியளவு ஆனதும் அடுப்பிலிருந்து இறக்கி குளிர வைக்கவும். இதை கரட் சாறுடன் சேர்த்து பருகினால் அல்சர் குணமடையும்.

7. பாதாம் பால் (தோலுரிக்கப்பட்ட பாதாம் பருப்புகளால் செய்வது) அல்சருக்கு நல்லது.

8. உடைத்த அரிசியை, ஒரு பாகத்திற்கு 14 பாகம் தண்ணீர் சேர்த்து கஞ்சி தயாரிக்கவும். இது அல்சருக்கு நல்லது. பருப்பு, அரிசி தண்ணீர் சேர்த்து பொங்கல் போல் தயாரித்து உட்கொள்ளலாம்.

9. மாதுளம் பழச்சாறு அல்சருக்கும் நல்லது.

10. திரிபாலா சூரணம்: (ஒரு தேக்கரண்டி) நெய் ஒரு தேக்கரண்டி மற்றும் தேன் 1/2 தேக்கரண்டி கலந்து எடுத்துக் கொண்டால் அல்சர் குணமாகும்.

11. கொத்தமல்லி விதைகளைப் பொடியாக அரைத்துக் கொள்ளவும். ஒரு பாகத்திற்கு 6 பாகம் தண்ணீர் என்ற அளவில் கலந்து கொதிக்க வைக்கவும். இரவு ஊற வைத்து மறுநாள் காலையில் இந்த நீரை வடிகட்டி வெறும் வயிற்றில் குடிக்கவும்.

12. உங்களுக்கு அல்சர் இருந்தால் உளுந்து, கொள்ளு, மதுபானங்கள், சிகரெட், கத்திரிக்காய், மசாலா கலந்த காரசாரமான உணவு இவற்றை தவிர்க்கவும்.

13. உண்ணும் போது கோபம், தாபம், வருத்தங்களை தவிர்க்கவும்.

14. ஒரே வேளையாக அதிகம் உண்பதை தவிர்த்து, இடைவெளி விட்டு சிறிதாக உட்கொள்ளவும்.

15.பின்வருவனவற்றைத் தவிர்க்கவும்: மிளகு, உளுந்து, கொள்ளு, மது பானம், கத்திரிக்காய், புளிப்பான பண்டங்கள், எண்ணை, காரம் செறிந்த உணவுகள்.

**பலமான, வலுவான வயிறு - குடல் சுவர்களை அமிலம் எப்படி பாதிக்கும்?**

வயிற்றின் சுவர் கவசம் போன்ற புறத்தோலால் மூடப்பட்டுள்ளது. டியோடினம் (சிறுகுடலின் முதல் பகுதி) காரத்தன்மை உள்ள சளி சுரப்புகளால் பாதுகாக்கப்படுகிறது. டியோடினத்தில் அமைந்துள்ள பிரன்னர் சுரப்பிகள் இந்த சளிப்பொருளை சுரக்கின்றன. இருந்தும் இந்த கவசங்கள் சிதைக்கப்பட்டு புண்கள் உண்டாகும் காரணங்களை அறுதியிட்டு சொல்ல முடியவில்லை. மதுபானம். தெரிந்த ஒரு வயிற்று ம்யூகோஸாவை சிதைக்கும் பானம். கருமிளகும் வயிற்றில் எரிச்சலை உண்டாக்கும். மிளகாய் தூள், லவங்கம் ஜாதிக்காய், கடுகு இவை வயிற்றை 'சிவக்கவைக்கும்' பல சரக்குகள் என்று தெரியவந்துள்ளது. சாலிசைலேட்ஸ் மற்றும் இதர மருந்துகளும் வயிறு - குடல் சுவர்களை பாதிக்கின்றன. வயிற்று அமிலத்தை அதிகம் சுரக்க வைக்கும் பொருள், கோப்பி தேநீரில் உள்ள காஃபின் ஆகும். இந்த காஃபின் இல்லாத காப்பியும் அமிலப்பெருக்கை தூண்டும். பூண்டு, முள்ளங்கி கடுகு இவைகளை தனித்தனியாக, அதிக அளவில் பயன்படுத்தினால் தான் அதிக அமிலம் சுரக்கிறது. கோலா கலந்த குளிர்பானங்களும் அதிக அமிலத்தை சுரக்க வைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரின் பெயரால்.....

- என்.ஜனகா






வரலாறு என்பது உண்மையில் பெரும் புனைவுகளால் சூழப்பட்ட ஒன்றுதான். ஏனெனில் வென்றவர்களின் கரங்கள் எழுதிவைத்துவிட்டுச் சென்ற வீரபிரதாபங்களே பின்னாள்களில் வரலாறாகக் கொள்ளப்பட்டன. ஒருவேளை மகாபாரதப் போரில் கௌரவர்கள் வென்றிருந்தால், மகாபாரதக் கதையே அடியோடு மாறியிருக்கும். திரௌபதை என்ற பெண்ணை பாண்டவர்கள் என்ற ஈவிரக்கமற்ற சகோதரர்கள் கூட்டுவன்புணர்வு செய்ததால் நீதியை நிலைநாட்ட கௌரவர்கள் போர் தொடுத்து வென்றதாக மகாபாரதம் புனையப்பட்டிருக்கும். சில சமயங்களில் சகுனிக்கு கோயில்கள் கூட அமைக்கப்பட்டிருக்கும்.

இலங்கையின் வரலாறு கூறும் மகாவம்சம் கூட இப்படியான புனைவுகளின் கூட்டுருவாக்கமே. காலத்துக்கு காலம் சிங்கள மன்னர்கள் தங்கள் பெருமைகளை மிகையாகப் பதிவு செய்து, அதனையே 'உண்மையான' இலங்கையின் வரலாறாக மாற்றினர். வரலாற்றை மாற்றுவதிலும் , புனைவதிலும் பேரினவாதிகளுக்கு நிகர் அவர்களேதான்.





இப்படியான வரலாற்றுப் புனைவுகளுக்கு புத்தரைத் துணைக்கு அழைப்பது அவர்களின் வழக்கமான உத்தி.

இப்படித்தான் திருகோணமலையின் கன்னியா வெந்நீருற்றும், கதிர்காமமும் புத்தரின் ஆட்சிக்குள் கொண்டுவரப்பட்டு, சிங்களமயமாகின. இதைவிடவும் யாழ்ப்பாணத்திலும் அரச மரங்கள் வீதிகள் தோறும் நாட்டப்பட்டு புத்தரின் சிலைகள் முளைத்தன. மாதகலில் சங்கமித்தை வந்திறங்கிய 'ஜம்புகோளப்பட்டினமும்' சிங்கள மக்களின் தொன்மையைச் சொல்லும் இடமாக உருமாற்றப்பட்டது. பௌத்த மதம் என்பது சிங்கள மக்களின் ஏகபோக மதம் என்பது போலவும், தமிழ் பௌத்தர்கள் முன்னைய காலங்களில் இருந்தார்கள் என்பதும் வெகு சுலபமாக -திட்டமிட்டு- மறக்கடிக்கப்பட்டது. கந்தோரடை தமிழ் பௌத்தர்களின் வழிப்பாட்டுக் கோயில்களும் சிங்கள முலாம் பூசப்படுவது இவ்வாறுதான்.

இந்தச் சிங்கள முலாம் பூசுதலின் அடுத்த குறிதான் நயினாதீவு. பேரினவாதிகள் ஒரு விடயத்தை மிகத் திட்டமிட்டு அரங்கேற்றி வந்தார்கள். ஒரு நபர் அல்லது இடம் என்பவற்றுக்கு எல்லா மொழிகளிலும் ஒரே பெயர்தான் வழங்கப்படும். அமெரிக்கா என்றால் அது எல்லா மொழிகளிலும் அமெரிக்கா தான். பிரபாகரன் என்றால் எல்லா மொழிகளிலும் பிரபாகரன் தான். ஆனால் சிங்களப் பேரினவாதிகள் ஆரம்பம் முதலே தமிழர் தாயகத்தில் உள்ள இடங்களின் பெயர்களுக்கு மேலதிகமாக தாமும் ஒரு சிங்களப் பெயரை வைத்தே அழைத்து வந்தார்கள். அதாவது அந்த இடங்களின் பூர்வீகப் பெயரே தாங்கள் குறிப்பிடும் பெயர் என்றும், 'கள்ளத் தோணிகளில்' வந்த தமிழர்கள் வைத்த பெயரே இப்போது அந்த இடங்களுக்கு வழங்கப்படுவதாகவும் ஒரு மனப்பிரமையை இதன்மூலம் உண்டாக்க முனைந் தனர். சாதாரண சிங்கள மக்களும் பேரினவாதிகளின் இந்த மனப்பிரமையை உண்மையென நம்பினர்.

யாழ்ப்பாணத்தை 'யாப்பா படுன' என்று அழைப்பது போல, நயினாதீவையும் நாகதீப என்றே அவர்கள் குறிப்பிட்டார்கள்.

ஆனால் உண்மை என்னவெனில் நாகதீபம் என்ற சொல் உண்மையில் யாழ்ப்பாணத்தை உள்ளடக்கிய பெரும்பகுதியையே குறித்து நின்றது. ஆயினும் தங்களின் வரலாற்றுத் திரிபுக்கு வசதியாக 1939 க்கு பின்னர் நயினாதீவை புத்தரின் தீவாக மாற்ற அவர்கள் தொடர்ச்சியாக நாகாதீப என்றே அழைக்கத் தொடங்கினர். ஒரு பொய்யை திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் உண்மையாக்குவதில் சிங்களப் பேரினவாதிகள் வெற்றியும் கண்டனர். இப்போது தமிழ்ர் தரப்பில் கொஞ்சம் விழிப்பு வந்து. எல்லோரும் அதனை நயினாதீவு என்றே அழைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது இது ஓர் இனவாத நடவடிக்கை என்றும் நாக தீப என்று அழைப்பதை தடைசெய்ய முடியாது என்றும்; இராவணபல; என்ற பேரினமத அமைப்பு போர்க்கொடி தூக்கியுள்ளது.

இந்த நிலையில் நயினாதீவு பற்றிய சில வரலாற்று ரீதியான தகவல்களை மீட்டுப்பார்ப்பது இங்கு அவசியமாகின்றது. விக்கிபீடியாவில் இருந்து, நயினாதீவு தொடர்பான நூல்கள், கல்வெட்டுக்கள் என்பவற்றில் இருந்தும் பெறப்பட்ட முக்கிய சில விடயங்கள் இங்கு பகிரப்படவேண்டியுள்ளது.

நயினாதீவு பற்றிய பல குறிப்புகள் தொன்மையான நூல்களில் உள்ளன. புத்தர் வாழ்ந்த காலத்தில் இலங்கையில் ஆட்சிபுரிந்த இரண்டு நாக அரசர்களுக்கிடையில் ஒரு மணியாசனத்தின் உரிமை தொடர்பாக ஏற்பட்ட பிணக்கைத் தீர்த்து வைப்பதற்காக அவர் நாகதீபத்துக்கு வந்ததாக மகாவம்சம் கூறுகிறது. இதே பிணக்கு/யுத்தம் மணிபல்லவத்தில்' இடம்பெற்றது என்று மணிமேகலை'க் காப்பியம் கூறுகின்றது. இங்கே பௌத்த கோவில் ஒன்று இருந்ததாகவும், இந்த நூலில் குறிப்புகள் உள்ளதாகக் கூறப்படுகிறது.

நயினாதீவுக்கு முற்காலத்தே பல பெயர்கள் வழங்கப்பட்டனவென்று கருதப்படுகிறது. குல.சபாநாதன் இத்தலத்திற்கு நாகதிவயின, நாகதீவு அல்லது நாகத்தீவு, நயினார்தீவு, நாகநயினார்தீவு, மணிநாகதீவு, மணிபல்லவத் தீவு, மணித்தீவு, பிராமணத்தீவு, ஹார்லெம் (Haorlem), சம்புத்தீவு, நரித்தீவு, நாகேஸ்வரம், நாகேச்சரம் முதலிய பல பெயர்கள் உள்ளனஎனக் குறிப்பிட்டுள்ளார். எனினும், இவற்றுட் பல பெயர்கள், வெறும் செவிவழிக் கதைகளின் அடிப்படையில் நயினா தீவுடன் தொடர்புபடுத்தப்படுவனவாகவும் ஆய்வாளர்கள் ஏற்கத்தக்க சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, இப்பெயர்கள் எக்காலத்திலாவது நயினாதீவைக் குறிப்பதற்கு வழங்கப்பட்டன என்று நிரூபிக்கப் பட முடியாதவையாகவுமே உள்ளன.

நாகதீப, மணிபல்லவம் ஆகிய பௌத்த சமயச் சார்புடைய பெயர்களை, குறிப்பாக நயினாதீவுடன் தொடர்புபடுத்தும் தொல்பொருட் சான்றுகள் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால், நாகதீவு (நகதிவ) எனும் பெயர் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் குறிப்பதாக வழங்கப்பட்டதற்கு அசைக்க முடியாத சான்றாக வசப அரசனின் காலத்தில் (கி.பி.66-111) பொறிக்கப்பட்ட வல்லிபுரக் கோயிற் பொற்சாசனம் விளங்குகின்றது. ஆகவே, நாகதீப அல்லது நாகதீபம் என்ற பெயரால் நயினாதீவை அழைக்கும் வழக்கம் மிகச் சமீப காலத்தில் - இங்குள்ள புத்தர் கோவில் அமைக்கப்பட்ட 1940 களின் முற்பகுதியில் - தோன்றியது என்பதே சரியாக அமையும்.

நாகதிவயின என்ற சிங்களப் பெயர், நயினாதீவைக் குறிப்பதாக கி.பி. 15ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நம்பொத்த என்ற சிங்கள நூலில் காணப்படுகின்றது. இது நயினார்தீவு அல்லது நாகநயினார் தீவு அல்லது நாகதீவு என்ற தமிழ்ப் பெயரின் சிங்கள வடிவமே என்பதற்கு நம்பொத்த குறிப்பிடும் ஏனைய தீவுகளுக்கான சிங்களப் பெயர்களே சான்றாகும். அவை வருமாறு:

தண்ணீர்த்தீவு (வேலணைத்தீவு)- தன்னிதிவயின

புங்குடுதீவு - புவங்குதிவயின

காரைதீவு - காறதிவயின

அனலைதீவு - அக்னிதிவயின

'நம்பொத்த' நூலாசிரியர் தமிழ் ஊர்ப் பெயர்களை சில இடங்களில் சிதைத்து சிங்களத்தில் மொழிமாற்றம் செய்ய முயன்றுள்ளார். வேறு சில இடங்களில்

( 22 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது அலைபேசியின் (செல்போன்) யுகம் என்று சொல்வது மிகையே அல்ல. இன்று மூலைமுடுக்கெங்கும் எல்லாருடைய கைகளிலும் தவழ்கிறது இந்த கைபேசி. இந்த அலைபேசியினால் பல நன்மைகள் கிடைக்கின்றன என்பதில் சந்தேகம் இல்லை. சிறந்த, விரைவான, எங்கும் எடுத்துச் செல்லக்கூடிய தொலைத் தொடர்பு சாதனம் இது. வணிகர்கள், பயணிகள், மருத்துவர்கள் என பல தரப்பட்ட மக்களுக்கும் அவசரத் தொடர்பு ஆதரவாளனாக அலைபேசி விளங்குகிறது.

இருப்பினும், அலைபேசியின் ஆபத்துகள் பற்றியும், தீமைகள் பற்றியும் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர் அறிவியலாளரும், சமூக ஆர்வலர்களும். அலைபேசியினால் கிடைக்கும் நன்மைகளைவிட, ஏற்படும் ஆபத்துகளே அதிகம் என்று இவர்கள் எச்சரிக்கின்றனர்.

**1.உயிருக்கே ஆபத்து**

அலைபேசியை அதிகம் பயன்படுத்துவது உயிருக்கே உலை வைக்கும் என்றால் நம்புவதற்கு கொஞ்சம் கடினம்தான். ஆனால், அது உண்மைதான். ஷீலா ப்ரைஸ் என்னும் அமெரிக்கப் பெண்மணி தான் வேலை செய்யும் அலுவலகத்தில் தொடர்ந்து அலைபேசியைப் பயன்படுத்தியதால் மூளைப் புற்றுநோய்க்குப் பலியானார். டாக்டர் நாக்மன் பிராட்பர் என்னும் மருத்துவர் இந்த உண்மையை நீதிமன்றத்தில் ஆதாரத்துடன் எண்பித்து முதல் எச்சரிக்கை மணியை அடித்தார்.

**2.உருவாகும் நோய்கள்**

அலைபேசியைப் பயன்படுத்தும் அனைவரும் சாவை உடனே சந்தித்து விடுவதில்லை. ஆனால், நிச்சயமாக நோய்களால் தாக்கப்படுவர் என்பதை பல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. குறிப்பாக, அலைபேசி வெளியேற்றும் மின்காந்த அலைகள் லுக்கேமியா என்னும் இரத்தப் புற்றுநோய், தோல் புற்றுநோய்கள், வலிப்பு நோய் மற்றும் மூளைப் பாதிப்பு



போன்ற நோய்களை ஏற்படுத்தும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். அத்துடன், அலைபேசியை அதிகம் பயன்படுத்தும் ஆண்களுக்கு ஆண்மைக் குறைவு ஏற்படும் என்றும் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**3.சுற்றுச் சூழலுக்கு ஆபத்து**

இன்று அலைபேசிக் கோபுரங்கள் ஏராளம் நிறுவப்பட்டுள்ளன. இவை மூலம் பரவும் மின்காந்த அலைகள் சுற்றுச் சூழலுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்று சூழல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பறவை இனங்கள், சிறு பூச்சிகள், வண்டுகள் போன்றவை இந்த மின் காந்த அலைகளால் தாக்கப்படுகின்றன என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

**4.வீணாகும் நேரம்**

அறிவியல் தளத்திலிருந்து, சமூகத் தளத்திற்கு வந்தால், இன்னும் பல தீமைகளைச் சந்திக்கிறோம். இவற்றுக்கு ஆய்வுகளோ, அறிக்கைகளோ தேவையில்லை. நம் அன்றாட அனுபவங்களே இவற்றை உறுதிப் படுத்துகின்றன. அலைபேசியின் வரவுக்குப் பிறகு ஏராளமான நேரம் விரயமாக்கப்படுவதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். குறிப்பாக, இளைஞர்கள், மாணவர்கள் தங்களின் பொன்னான நேரத்தை அலைபேசியில் உரையாடியும், குறுஞ்செய்திகள் அனுப்பியும் வீணாக்குகிறார்கள். அவசியமான பணிகளுக்கு அலைபேசி பயன்படுத்தப்படுவதைவிட, பொழுது போக்கிற்கும், உறவுத் தொடர்புகளுக்குமே இன்று அதிக நேரம் அலைபேசியில் செலவாகிறது.

**5.பண விரயம்**

அலைபேசியில் அதிகம் பேசப் பேச பணம் அலையாகக் கரை கிறது. முன்பெல்லாம், தொலை பேசி மட்டுமே இருந்த இல்லங் களில் கூடுதலாக அலைபேசிகளும் பயன்படுத்தப்படுகின்றன. அலைபேசியின் செலவு அவசியமற்ற செலவு என்பதை பெரும்பாலானவர்கள் உணராத அளவுக்கு அலைபேசிப் பைத்தியம் மக்களை ஆட்கொண்டிருக்கிறது என்பது வேதனையான உண்மை.

**6.பாழாகும் படிப்பு**

இந்தியாவில் மட்டுமல்ல, பெரும்பாலான இதர நாடுகளிலும் மாணவர்கள் அலைபேசியைப் பயன்படுத்துவதைத் தடை செய்ய வேண்டும் என்னும் கோரிக்கை வலுவடைந்து வருகிறது. மாணவர்கள் தங்களின் நேரத்தையும், கவனத்தையும் அலைபேசி மூலம் இழந்து வருகின்றனர். அது மட்டுமல்ல, அலைபேசிப் பயன்பாடு மூளையின் நரம்புகளைப் பாதித்து, கவனம் செலுத்தும் ஆற்றலைக் குறைக்கிறது, நினைவாற்றலைப் பாதிக்கிறது என்பதையும் மருத்துவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, மாணவர்கள் நிச்சயமாக அலைபேசியைப் பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும்.

**7.அடிமைப் பழக்கம்**

மது, போதைப் பொருள் போலவே அலைபேசிப் பயன்




பாடும் ஓர் அடிமைப் பழக்கமாக மாறிவருகிறது. இளைஞர்கள் அலைபேசிக்கு அடிமையாகி விட்டனர் என்றும், அலைபேசியைப் பயன்படுத்தாமல் இருந்தால் பித்துப் பிடித்தவர் போலாகிவிடுகின்றனர் என்றும் சீனாவில் ஆய்வு செய்து கண்டிருக்கின்றனர். நமது நாட்டிலும் அலைபேசி அடிமைகள் நிறைய பேர் இருக்கின்றனர் என்று அடித்துச் சொல்லலாம்.

**8.பண்பாட்டுச் சீர்கேடு:**

பேருந்து நிலையம், மருத்துவ மனை போன்ற பொது இடங்களில்கூட அருகே இருக்கும் சக மனிதர்களைப் பற்றித் துளியும் கவலைப்படாமல் அலைபேசியில் வெட்டிப்பேச்சுப் பேசும் நாகரிக மின்மை எங்கும் பரவி வருகிறது. வழிபாட்டுத் தலங்கள், கருத்தரங் குகள் போன்ற இடங்களிலும்கூட அலைபேசியை அணைத்து விடுங்கள் என்று அறிவிப்புச் செய்யும் அவல நிலையில் இருக்கிறது நம் பண்பாடு.

**9.விபத்து**

அலைபேசியைப் பயன்படுத்திக்கொண்டே வாகனம் ஓட்டுவதனால் விபத்துகள் நிகழ்கின்றன என்பதை உணர்ந்து விழிப்புணர்வுப் பதாகைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இருப்பினும், இந்த இழிவான பழக்கம் குறைந்தபாடில்லை என்பதை அன்றாடம் நாம் பார்க்கிறோம்.

**10.ஒழுக்கவியல் தீமைகள்**

உயிர் காக்க, அவசரத் தேவைகளுக்கு, பயண நேரத்தில் என அலைபேசியின் நல்ல பயன்பாடுகள் பல இருந்தாலும்கூட, அதே அலைபேசி பல தீய செயல்பாடுகளுக்கும் பயன்படுகிறது என்பது அச்சத்தைத் தருகிறது. கொலை, கொள்ளை, விபச்சாரம், பெண்களை இழிவுசெய்தல் போன்ற சமூகத் தீமைகளுக்கும் அலைபேசியைப் பயன்படுத்தி, தொழில் நுட்பம் என்பது இருபுறமும் கூர் வாய்ந்த கத்தி என்பதை எண்பிக்கின்றனர் சமூக விரோதிகள்.

இன்னும் பலவற்றை அடுக்கலாம். எடுத்துக்காட்டாக, அலைபேசியைப் பயன்படுத்துவதால் இறைவன்மீது கொள்ளும் நம்பிக்கைகூட குறைந்து போகிறது என்று ஆன்மீகவாதிகள் குறைசொல்கின்றனர்.

**சில பரிந்துரைகள்:**

***1.அறவே நிறுத்தலாம்:***

அலை பேசியே இல்லாமலும் நிறைவான வாழ்வு வாழ முடியும் என்று எண்பிக்கின்றனர் கொள்கைப் பிடிப்புள்ள சிலர். மனம் இருந்தால், நிச்சயம் நிறைவேற்றலாம்.

***2.நேரக் குறைப்பு:***

கண்டிப்பாக ஒருநாளில் எவ்வளவு நிமிடங்கள் அலைபேசியில் பேசுகிறோம் என்பதைக் கணக்கிட்டு அதைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

***3.வாரம் ஒருநாள் விடுமுறை:***

வாரத்தில் ஒருநாளைத் தேர்வு செய்து, அந்த நாள் முழுதும் அலைபேசிக்கு ஓய்வு கொடுப்பது நல்ல ஒரு செயல்.


- தந்தை குமார்ராஜா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப்புனல்

## மனக்கனவுகள்



முகூர்த்த நாள்களில்
வீடுதேடிவரும்
திருமண அழைப்புகள். - என்
மனத்திரையில் ஓடும்
மணவிழா நிகழ்ச்சிகள்.

புதுச்சேலை உடுத்தி
முகம் திருத்தி
கலைநயச்சிரிப்போடு
கற்பனையில் சிறகடிக்கும்
என் மனம்.

அடுக்களையிலிருந்து
காபி பலகாரம்
எடுத்து வரச்சொல்லி
அவசரப்படுத்தும் அம்மா,
பின்னலைப் பிடித்திழுத்து என்
கன்னத்தைக் கிள்ளி
கேலி பல பேசும்
உயிர்த்தோழிகள்.

ஒருவருக்கொருவர்
மாலை மாற்றியதிலிருந்து
அமிழ்தினுமினிய
அறுசுவை உணவை பகிர்தலில்
தொடரும்
உணர்வின் நிகழ்வுகள்

ஆயிரங்காலத்துப் பயிரை
காலமெல்லாம்
கண்ணும் கருத்துமாய்
வளர்ப்பதெப்படி என்னும்
கேள்விக்கு விடைதேடும்
என் மனக்கனவுகள்!

- காமராஜ்

## ஏமாற்றம்!

உன் சிறகுகளில் அமர்ந்திருக்கிறது
வானம்.
உன் விழிகளைத் திறந்து பார்!
ஒடுங்கிவிடும் வெளி!
உன் விரல்களின் சிட்டிகையொலி கேட்டு
பணிந்து நிற்கும் கோள்களெல்லாம்
உன் நிமிர்தலில் வந்து
அடி பணிந்து நிற்கும் பிரபஞ்சம்!
ஆம் தோழனே!
உன் அசைவில் ஐம்பூதங்களும்
ஆணைகேட்க
கைகட்டி நிற்கும்!
என்றெல்லாம் உசுப்பிவிட்டு,
தம்மை நிரப்பிக்கொள்வார்,
உன் உழைப்பை!
ஏமாந்தது போதும்,
எச்சரிக்கை!

- கா. அமீர்ஜான்



## உறங்காத உண்மைகள்...

நினைவின் வலைப்பின்னல்கள்-
நீண்ட கூந்தலில் விழுந்த
சிக்கலாய்..
பிரித்தெடுக்க முடியாமல்
பின்னிக் கிடக்கின்றன..
சிக்கலைச் சிக்கலாக்க-
வந்து ஒட்டிக்கொள்ளும்
வாழ்க்கைக் கசப்புத் துகள்கள்..
இவைதான்-
இதயச்சுவரில் படிந்துவிட்ட
உறங்காத உண்மைகள்...!

-செண்பக ஜெகதீசன்...

## குழப்பம்??

மறக்க நினைப்பதை
மறக்க முடியவில்லை
நினைக்க நினைப்பதை
நினனக்க முடியவில்லை
இது எதனால்
வந்த குழப்பம்??
தவியாய் தவிக்கிறது!!
இன்றைய ஜீவராசிகள்...

-புவிதா



# குறைவில்லா சத்துக்களை வழங்கும் கொய்யா



இயற்கை ஒவ்வொன்றையும் மிகச் சரியாகவே இயக்குகிறது. அதைப் புரிந்துகொள்ள முடியாத மனிதன், இயற்கைக்கு நேர் எதிராக இயங்க ஆரம்பிக்கும் போதுதான் பிரச்சினை ஆரம்பமாகிறது. இது, நம் உடலுக்கும் பொருந்தும். ஒவ்வொரு பகுதியிலும், அந்தந்த தட்பவெப்பச் சூழலுக்கு ஏற்ப, மனிதனுக்குத் தேவையான உணவுகளை இயற்கை படைத்திருக்கிறது. உதாரணத்துக்கு, வெயில் காலத்தில் பதநீர், நுங்கு.

'உள்ளூர் மாடு விலை போகாது' என்பார்கள். அதுபோல, விலை குறைவாக உள்ள நம் ஊர் பழங்களை நாம் அதிகம் விரும்பி உண்பது இல்லை. இன்றைக்கு அப்பிள், தோடம்பழம், பட்டர் ஃப்ரூட், மங்குஸ்தான், ரம்புட்டான் போன்ற வெளிநாடுகளில் இருந்து இறக்குமதியாகும் விதவிதமான பழங்களை, அதிக விலை கொடுத்து வாங்கி உண்கிறோம். இந்தப் பழங்களுக்கு எந்த வகையிலும் குறையாத சத்துக்கள் கொய்யா, பப்பாளி, போன்ற பழங்களில் இருக்கின்றன.

'கொய்யாவைக் கடித்துத் தின்னா... பலன் அதிகம் பையா! எனச் சொல்லிவைத்தனர் நம் முன்னோர். 'ஏழைகளின் அப்பிள் எனச் சொல்லப்படும் கொய்யாவில் எமது உடலுக்குத் தேவையான சத்துக்கள் நிறையவே உள்ளன. எனவே 'உள்ளூரில் விளையும் பழங்களைச் சாப்பிடுவது கௌரவக் குறைச்சல் என்று நினைத்து நாம் ஒதுக்கி விடக் கூடாது.

உண்மையில், அனைத்துவிதமான சமச்சீர் சத்துக்களும் நம் ஊர் பழங்களில் உள்ளன. நீரிழிவு, உயர் ரத்த அழுத்தம், ரத்தத்தில் கொழுப்பு அளவு அதிகரிப்பு ஆகிய இந்த மூன்றும்தான் இன்றைக்கு இருக்கிற மிக முக்கியமான பிரச்சினைகள். இந்த மூன்றுக்குமான அருமருந்து, கொய்யாப் பழம்தான். சர்க்கரை நோயாளிகள் கொய்யாவைச் சாப்பிடக் கூடாது என்பார்கள். இது தவறான கருத்து. கனிந்த பழமாகச் சாப்பிடாமல், அரைப் பழமாகச் சாப்பிடலாம்.



தொடர்ந்து சாப்பிட்டுவந்தால், சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் கொய்யாவுக்கு உண்டு. உயர் ரத்த அழுத்தம், இதயப் படபடப்பு ஆகியவற்றைக் குறைக்கும். இன்றைக்கு பெண்கள், குழந்தைகள் மத்தியில் ரத்த சோகை பெருமளவில் உள்ளது. ரத்த சோகையைப் போக்கும் சக்தி, கொய்யாவில் உள்ளது. கண்ட உணவைச் சாப்பிட்டு, வயிற்றைக்கெடுத்து வைத்திருக்கிறோம். இதனால் ஏற்படும் செரிமானக் குறைபாட்டைப் போக்க, கொய்யாப் பழம் சாப்பிடலாம்.

தோடம் பழத்தில் விற்றமின் 'சி 'அதிகமாக உள்ளது என்பார்கள். ஆனால், அதைவிட மூன்று மடங்கு அதிகமாக கொய்யாவில், விற்றமின் 'சி 'இருக்கிறது. இதேபோல, கல்சியம் உள்ளிட்ட தாதுப் பொருள்களும் மிக அதிக அளவு உள்ளன. இதனால், குழந்தைகள் தினமும் கொய்யாவைச் சாப்பிட்டு வந்தால், அவர்கள் எலும்பு மற்றும் பற்கள் பலம் அடையும். வாழைப்பழத்தில் இருப்பதைவிட பொட்டாசியம் சத்து கொய்யாவில் கூடுதலாக உள்ளது.

உடலில் சேரும் நச்சுக்களை வெளியேற்றி, செல்களைப் புதுப்பிக்கும் திறன்கொண்ட 'ஆன்டி ஆக்சிடன்ட் அப்பிள், மாதுளை, வாழைப்பழம், திராட்சை அனைத்தையும்விட, கொய்யாவில் அதிகம் இருக்கிறது .

தோல் பிரச்சினைகளுக்கு தீர்வைத் தரும். மலச்சிக்கலை நீக்கும். கல்லீரலைப் பலமாக்கும். புற்றுநோயாளிகளுக்கு மிகவும் நல்லது.

வாய்ப்புண், வயிற்றுப் புண் உள்ளவர்கள் கொய்யா மரத்தின் கொழுந்தை தினமும் மென்று விழுங்கினாலே, கை மேல் பலன் கிடைக்கும். இப்படி எல்லாப் பிரச்சினைக்கும் தீர்வைத்தந்து ஆரோக்கியத்தைக் காக்கும் கொய்யாப் பழத்தை, 'பழங்களின் சூப்பர் ஸ்டார் என்கிறார்கள். விலை குறைவாகவும், சத்துக்களின் பெட்டகமாக இருக்கிற கொய்யாவை அனைவரும் சாப்பிடப் பழகிக்கொள்ள வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவையும் கொஞ்சம் தெரிஞ்சுக்க வேண்டும்

- உங்களின் எடை குறைந்துவிட்டதா? கவலை வேண்டாம். உங்களுக்கு நீளக்காற்சட்டை பொருத்தமாக இருக்கும். அதை அணிந்து அழகு பாருங்கள். அதே நேரத்தில் திடீரென்று உங்கள் எடை குறைந்தது ஏன் என்பதைக் கண்டறிய மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளுங்கள்.
- உங்கள் குடும்பத்தினருக்கோ, அருகில் வசிப்பவர் களுக்கோ சிறு விபத்தோ, இதய பாதிப்போ ஏற்படலாம். அவரை ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்ப்பது அவசியம் என்றாலும், உடனடியாக அவருக்கு முதலுதவி அளிக்கப்பட வேண்டும். முதலுதவி பற்றி நீங்களும் தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள்.
- பெண்கள் புதிதாக தொழில் தொடங்க அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். அவர்கள் முக்கியமாக தொழில் நேர்த்தியைக் கற்றுக்கொள்ள வேண்டும். நட்பான அணுகுமுறை அவர்கள் முன்னேற்றத்தின் படிக்கல் என்பதை தெரிந்துகொள்ள வேண்டும்.
- சிலர் ஹோட்டலில் சுவை நன்றாக இருக்கிறது என்று எண்ணி அடிக்கடி ஹோட்டல்களில் சாப்பிடுகிறார்கள். ஆனால் வீட்டில் சமைக்கும் உணவில்தான் உடலுக்கு நல்ல ஆரோக்கியம் கிடைக்கிறது. வீட்டில் சாதம், கூட்டு, பொரியல் ஆகியவற்றை சுவையாக சமைப்பது எப்படி என்பதை பெண்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.
- வீட்டில் பொழுதுபோக்குக்காக ஒதுக்கப்படும் நேரங்களில் இசையை ஈடுபாட்டுடன் கேட்கலாம். மனது இலகுவாகும்.
- ரீ.வி பார்க்கும் போது அருகில் இருப்பவர்கள் திடீரென உங்கள் மீது விழுந்தாலோ, அருகில் உள்ள மேசையிலிருந்து யாராவது இருமினாலோ உங்களுக்கு எரிச்சல் வரும் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலிலே நீங்களாகவே அந்த மாதிரியான தொந்தரவுக்கு இடம் கொடுக்காமல் விலகி அமர்ந்து விடுங்கள்.
- வீட்டில் பொருள்கள் ஆங்காங்கே ஒழுங்கு இல்லாமல் சிதறிக் கிடந்தால் எரிச்சல் ஏற்படும். இப்படிச் சிதறிக் கிடக்கும் பொருள்களை ஒழுங்குபடுத்தலாம். மேலும் ஆங்காங்கே கிடக்கும் குப்பைகளை எடுத்து குப்பைத் தொட்டியில் சேகரிக்கும் நல்ல பழக்கத்தையும் கற்றுக் கொள்ளலாம்.
- குடிநீரை கொதிக்க வைக்கும்போது அதில் சீரகம் கலந்திடுங்கள். கொதிக்க வைத்து ஆறியபின் அதை குடிநீராக அருந்துங்கள். தினமும் 3 லீற்றர் தண்ணீர் அருந்தினால் வெப்பத்தால் உடான உடல் சூடு குறையும். சீராக தண்ணீர் உடல் ஆரோக்கியத்தையும் சீராக வைத்திருக்க உதவும்.
- தற்காப்புக் கலைகளை தெரிந்து வைத்திருங்கள். அது உங்களை எதிரிகளிடமிருந்தும், பகைவர்களிடமிருந்து காத்துக்கொள்ள உதவும். தற்காப்பு கலை எதுவும் தெரிந்திருக்காவிட்டாலும் உங்கள் மனதை எப்போதும் தன்னம்பிக்கையோடு வைத்திருங்கள்.
- பெண்கள் தொழில், படிப்பு போன்ற காரணங்களுக்காக வெளியூர்களில் தனியாக வசிக்க நேரிடலாம். அந்த மாதிரியான வேளைகளில் தனியாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அப்படி இருப்பதால் மனரீதியாக தைரியம் கிடைக்கும்.
- பெண்கள் பணத்தை சம்பாதிப்பதை விடவும், அதை சேமிப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். சரியான நிறுவனங்களை தேர்ந்தெடுத்து முதலீடு செய்ய வேண்டும்.
- திடீரென உங்கள் வீட்டுக்கு உறவினர்கள் அதிக பேர் வந்தால் உங்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். அந்த நேரங்களில் மன அழுத்தத்துக்கு உட்படாமல் இன்முகத் தோடு வேலையை பாருங்கள். உங்கள் முகத்தில் தோன்றும் புன்னகையே விருந்தாளிகளின் பாதி பசியைப் போக்கிவிடும்.
- புத்தகங்களை படிப்பது போல் சிறந்த பொக்கிஷம் வேறென்றும் இல்லை. நல்ல நல்ல சிந்தனை உள்ள புத்தகங்களைளம், வரலாற்றுப் பதிவுகளையும் படிப்ப தன் முலம் பல விஷயங்களை வீட்டில் இருந்தவாறு தெரிந்து கொள்ளலாம்.
- தினமும் அதிகாலை 5 மணிக்கு எழும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்.





மகளிர் மட்டும்

# உப்புமா



### தேவையான பொருள்கள்

| | |
|---|---|
| 1. வறுத்த ரவை | - 1 கப் |
| 2. வெங்காயம் | - 1 |
| 3. பச்சை மிளகாய் | - 3 |
| 4. நெய் | - 1/2 கரண்டி |
| 5. இஞ்சி | - சிறு துண்டு |
| 6. கடுகு | - 1/2 கரண்டி |
| 7. மிளகு | - 1/2 கரண்டி |
| 8. சீரகம் | - 1/2 கரண்டி |
| 9. உப்பு | - தேவையானது |
| 10. மஞ்சள்தூள் | - சிறிது |
| 11. எண்ணெய் | - தேவையாது |
| 12. கடலைப்பருப்பு | - 1 கரண்டி |
| 13. கறிவேப்பிலை | - சிறிது |
| 14. முந்திரிப்பருப்பு | - 6 |
| 15. தேங்காய்த்துருவல் | - 2 கரண்டி |

## செய்முறை

1. ஒரு கடாயில் எண்ணெய் விட்டுக் காய்ந்ததும் கடுகு, கடலை பருப்பு, மிளகு, சீரகம், முந்திரி ஆகியவற்றைச் சேர்த்துப் பொன்னிறமானதும், கறிவேப்பிலை சேர்க்கவும்.
2. பிறகு நறுக்கிய வெங்காயம் சேர்த்து வதக்கவும்.
3. வெங்காயம் இலேசாக வதங்கியவுடன், இஞ்சி, பச்சை மிளகாய் சேர்த்து வதக்கவும்.
4. அதன் பிறகு தேங்காய்த் துருவல் மற்றும் மஞ்சள் தூள் சேர்க்கவும்.
5. அதில் ரவையைப் போல் இருமடங்கு தண்ணீர், உப்பு சேர்த்து மூடி தண்ணீர் நன்றாக கொதிக்க வைக்கவும்.
6. பின் வறுத்த ரவையைக் கொதிக்கும் தண்ணீரில் கொட்டி, கட்டிகள் இல்லாமல் நன்றாகக் கிளறவும்.
7. உப்புமா நன்றாக வெந்தவுடன் நெய் சேர்த்துக் கிளறி இறக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வார

# இராசி பலன்

02.12.2015 ~08.12.2015

**மேஷம்**

### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

நீண்ட நாள் முயற்சி கூட இனிதே நிறைவேறும். பண வரவு பன்மடங்கு அதிகரிக்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு சிறப்பாக நடந்தேறும். உடன்பிறந்தவர்களால் உதவி கிடைக்கும். புதிய வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், வருமானமும் அதிகரிக்கும். பணியாளர்கள் திறம்பட பணிபுரிந்து, நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர். மாணவர்களுக்கு ஞாபகத்திறன் மேம்படும்.

**ரிஷபம்**

### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள்

வாழ்க்கை முன்னேற்றப் பாதையில் செல்லும். வாகனத்தின் பயன்பாட்டால் இனிமை காண்பீர்கள். உறவினர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும். புத்திரரை வழி நடத்துவதில் மென்மையான அணுகுமுறை தே வ. ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது. மனைவியின் ஆலோசனையை ஏற்பதால் நன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் கடமை உணர்ந்து செயல்படுவர். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவர்.

**மிதுனம்**

### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள்

ஆரோக்கியம் மேம்படும். அக்கம் பக்கத்தினரின் அன்பும், அரவணைப்பும் கிடைக்கும். பூர்வீக சொத்து மூலம் வருமானம் உண்டாகும். எதிரியால் இருந்த தொல்லை மறையும். மனைவியின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதியவர்களின் ஆதரவு கிடைக்கும். லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணியை விரைந்து முடிப்பர். பெண்கள் பணம், நகை பாதுகாப்பில் கவனம் செலுத்துவது நல்லது. மாணவர்கள் கல்வியில் மேம்படுவர்

**கடகம்**

### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

பேச்சு, செயலில் புத்துணர்வு வெளிப்படும். பசு, பால் பாக்ய யோகத்தால் நன்மை காண்பீர்கள். வாகன பயணத்தால் இனிய அனுபவம் ஏற்படும். புத்திரர்கள் உங்களுடன் கருத்து வேறுபாடு கொள்ள வாய்ப்புண்டு. கடன் பிரச்சினை ஏற்படலாம். மனைவி வழி உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சோம்பலைக் கைவிடுவது அவசியம். பெண்கள் பிள்ளைகளின் நலனில் அக்கறை செலுத்துவர்.

**சிம்மம்**

### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

கண்களின் பாதுகாப்பில் கவனம் தேவை. வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். பிள்ளைகள் உங்களின் கருத்துக்கு மதிப்பு கொடுப்பர். வழக்கு விஷயத்தில் முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. கணவன், மனைவி ஒற்றுமையுடன் செயல்படுவர். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடையூறுகளை உடனடியாக சரி செய்யவும். பணியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை அறிந்து கொள்வர். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தை கடைபிடிப்பர்.

**கன்னி**

### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள்

வாகன வகையில் பராமரிப்பு செலவு ஏற்படும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கில் வெற்றி கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்தித்தாலும் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர். மாணவர்கள் நண்பர்களுடன் பொழுதுபோக்கில் ஈடுபடுவர்.

**துலாம்**

### சித்திரை 3, 4ஆம் பாதங்கள்.

மனதில் உற்சாகம் பிறக்கும். பேச்சிலும், செயலிலும் நிதானம் வெளிப்படும். வீடு, வாகன வகையில் கூடுதல் பாதுகாப்பு தேவை. புத்திரரின் எதிர்கால வளர்ச்சிக்கு துணைபுரிவீர்கள். விலகிய உறவினர் சொந்தம் பாராட்டுவர். மனைவியால் குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் லாபம் காண்பீர்கள். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் திறமையை வளர்த்துக் கொள்வர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்**

### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

புத்திரர்களின் வளர்ச்சி கண்டு பெருமை உண்டாகும். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியின் மனதில் உங்கள் மீதான நல்ல எண்ணத்திற்கு குறை வராமல் பாதுகாக்கவும். அரசு வகையில் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்தி ஆதாயம் காண்பீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்ட திட்டத்தை மதித்து நடக்கவும். பெண்கள் பிறருக்காக பணப் பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் நண்பரோடு சேர்ந்து படிப்பர்.

**தனுசு**

### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

முக்கியஸ்தர்களின் அறிமுகம் கிடைக்கும். புதிதாக வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். உடன் பிறந்தவர்களுடன் கருத்து வேறுபாடு உண்டாகலாம். புத்திரர்களின் வளர்ச்சியில் அக்கறை காட்டுவீர்கள். எதிரி தொல்லை மறையும். மனைவியுடன் இருந்த மோதல் போக்கு மறையும். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**மகரம்**

### உத்தராடம் 2,3,4ஆம்பாதங்கள்.

. மகளின் ஜாதக யோக பலனால் நன்மை ஏற்படும். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பை செய்வது நல்லது. உடல் நலனுக்கு ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும். மனைவி வழி சார்ந்த உறவினர்களால் உதவி கிடைக்கும். தொழிலில் புதிய உத்தி மூலம் வருமானத்தைப் பெருக்குவீர்கள். பணியாளர் கடமையை உணர்ந்து சிறப்பாக பணிபுரிவர். பெண்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்தவும். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

**கும்பம்**

### அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள்.

இடையூறு செய்தவர் விலகிப் போகும் சூழல் உருவாகும். சுப விஷயத்தில் இருந்த தடை நீங்கும். உடன்பிறந்தவர்களின் ஆதரவால் மகிழ்ச்சி ஏற்படும். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்களுக்கு இடம் தர வேண்டாம். மனைவியிடம் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவர். பெண்கள் பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வர். மாணவர்களுக்கு நட்பு விஷயத்தில் கவனம் தேவை.

**மீனம்**

### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

வாகன பயணத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர்களின் செயல்பாடு நன்மைக்கு வழிவகுக்கும். ஆரோக்கிய விஷயத்தில் அக்கறை உண்டாகும். மனைவியின் ஆலோசனையை பரிசீலிப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப நலனில் கவனம் செலுத்துவர். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதை குறைக்கவும்.

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

114



ரஜனி வீட்டில் துயர் பகிர்வதோடு செத்த வீட்டுச் சடங்கு முடியவில்லை. பிரதான ஈமச் சடங்குகள் மறுநாள் மாலை நடைபெற இருந்தன. கிராமத்தின் விளையாட்டு மைதானத்தில், ஒரு பெரிய பொதுவான இறுதிச்சடங்காக நடத்த ஏற்பாடாகியிருந்தது. இப்படியான சந்தர்ப்பத்தில் எனது உணர்ச்சிகளை எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறேன்? ஆனால் நானும் மற்றவர்களைப் போல் எனது உணர்ச்சிகளை அடக்கியே ஆக வேண்டும். பலியாகி விட்ட விடுதலைப்புலி மாவீரர்களுக்கு ஒரு தேசிய பிரியாவிடை வீரவணக்கம் செலுத்த ஏற்பாடாகிக் கொண்டிருந்த அதே சமயம் . மீட்கப்பட்ட மாவீரரின் உடலங்கள், இறுதி நிகழ்வுக்காக அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

வல்வெட்டித்துறை மைதானம் சனத்திரளால் விம்மி வழிந்தது. வீழ்ந்து பட்ட பன்னிரண்டு மாவீரர்களுக்கும் இறுதி அஞ்சலி செலுத்த மக்கள் திரண்டிருந்தார்கள். துயரக் கனதி எங்கும் வியாபித்திருந்தது. திறந்திருந்த உடலப் பேழைகளைக் கடந்து மக்கள் மரியாதையுடன் வரிசையாக நடந்தார்கள். தமக்குத் தெரிந்த வீரரின் காலடியில் நின்று சிலர் விம்மினார்கள். ரஜனியும் , புலேந்திரனின் மனைவி சுபாவும் அலறியடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய உறவினர்கள் அவர்களைக் கட்டுப்படுத்தியபடி நின்றார்கள். கரனின் மனைவி குகாவும் அவருடைய இரண்டு பிள்ளைகளும் அந்தக் கூட்டத்தில் இருந்தார்கள். உறவினர்களே அவர்களையும் தேற்றிய வண்ணம் இருந்தார்கள். விம்மலும், ஓலமும் , ஒப்பாரியும் ஒவ்வொரு திக்கிலும் கேட்டன. கவிதை, பாடல்,இரங்கல் உரை என்று புகழாரம் ஒன்றன்பின் ஒன்றாக ஒலிபரப்பிகளை நிறைத்தன. இன்னும் சில நாள்களில் இந்தியப் படையுடன் நடைபெற இருந்த சமரில் உயிர் துறக்க இருந்த சந்தோசமும் புலிகளின் சார்பில் அன்று இரங்கல் உரை நிகழ்த்திய முக்கியமானவர் ஆவார். கனத்த இதயங்களோடும் சுரத்தே இல்லாதவர்களுமாக பிரபாகரனும் ஏனைய விடுதலைப்புலி தலைமை உறுப்பினர்களும் உடல் பேழைகளை மெதுவாகக் கடந்து சென்றார்கள். கடந்து போன ஆண்டுகளில் பிரபாகரனைப் பின்பற்றிய மிகுந்த விசுவாசமும், நம்பிக்கையும் உடைய சில மூத்த விடுதலைப்புலிப் போராளிகளின் உடலப் பேழைகளைக் கடக்கும் போது கால்கள் தயங்கின. பழைய நினைவுகள் சுரந்து வந்தன.

பிரபாகரன் அங்கிருந்து அகன்றதும், தீ மூட்டுவதற்கு முன்னதாக , தமிழ் மரபுப்படி , அந்தக் களத்தில் இருந்து ரஜனியும், சுபாவும், குகாவும் அகற்றப்பட்டார்கள். ரஜனி தனக்கு எதிர்ப்புறமாக எடுத்துச் செல்லப்பட்ட தனது கணவனின் உடலப் பேழையை விடாது பற்றிப் பிடிக்கப் போராடினார்.அவரைப் பிடித்து அணைத்து அப்பால் கூட்டிச் செல்ல வேண்டியதாயிற்று. அவருடைய அரற்றலை ஏற்கனவே தாங்க முடியாத செவிகளில் "அத்தான் அத்தான்" என்ற அவருடைய அலறல் துயரச் சுமை ஏற்றன. புலேந்திரனுடைய உடல் பேழையைப் தூக்கிச் செல்ல முற்பட்ட போது, இனிமேல் அதைப் பார்க்க முடியாது என்ற உணர்வு தாக்க, அதை விடாது அணைத்தபடி திமிறிய சுபாவைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பது பெரும்பாடாகியது.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்டாய் பறந்து வா





சில்லென அடிக்கும் காற்று
மெல்ல மேனியை வருடிடவே
இரைந்து ஓங்கும் அலைகளைக்
கரையில் நின்று ரசித்திடவே...

கட்டம் கட்டமாய் நூலை விட
பட்டம் உயர உயரப் பறந்திடவே
தோட்டம் தோட்டமாய்ப் பறக்கும்
பட்டங்களை பார்த்து ரசித்திடவே...

விண்ணில் ஒளிரும் வட்ட நிலவை
வண்ண முகில்கள் மறைத்திடவே
தாரகைகள் மின்னும் அழகினை
தரையில் நின்று ரசித்திடவே...

மணல் வீடு கட்டி நாமும்
மன மகிழ்ந்து விளையாடிடவே
சிட்டாய்ப் பறந்து வந்திடுவாய்
கடற்கரைக்குச் சென்றிடவே...!!

- பாஸித்



## ஆசிரியருக்கு அறிவூட்டிய குழந்தை


ஒரு பள்ளி ஆசிரியர் வண்ணப் புத்தகத்தில் யானையின் படத்தை வரைந்து கொண்டு வந்து. அதைக் காண்பித்து. இது என்ன? என்று மாணவர்களைக் கேட்டார்.

சின்னக் குழந்தைகள் எல்லாம் மகிழ்ச்சியாக, யானை!. யானை! என்றார்கள். அவர்களைப் பாராட்டி விட்டு அடுத்த வகுப்பை நோக்கிச் சென்றார் அந்த ஆசிரியர். அங்கும் அந்த யானையின் படத்தைக் காண்பித்து இது என்ன? என்று கேட்டார்.அங்கும் பல குழந்தைகள் யானை என்று குரலெழுப்பின.அங்கிருந்த ஒரு சின்ன குழந்தை எழுந்து. ஐயா, அது யானை அல்ல... அது யானையின் படம் என்றது. அந்தக் குழந்தையின் அறிவு ஆசிரியரின் அறியாமையை அவருக்கு உணர்த்துவதாக இருந்தது.

- கணேஷ் அரவிந்த்.



# சிறுவர் உலகம்



## வர்ணம் தீட்டுவோம்



## வேண்டுகோள்

அன்னை தெரசாக்கு உலகப் புகழ் பெற்ற நோபல் பரிசு 1979 ஆம் ஆண்டில் வழங்கப் பட்டது. இந்தப் பரிசினைப் பெறுவதற்காக அன்னை தெரசா சுவீடன் நாட்டுக்குச் சென்றார்.நோபல் பரிசு பெறுபவர்களுக்கு ஆடம்பர விருந்து அளித்துப் பாராட்டிப் பரிசு வழங்குவது வழக்கம்.இதையறிந்த அன்னை தெரசா பரிசுக் குழுவினரிடம் சென்றார். இவ்வளவு பெருந்தொகை செலவழித்து ஏன் விருந்து வைக்க வேண்டும்? அந்தத் தொகையினை என்னிடம் வழங்கினால் அதைக் கொண்டு மேலும் பல ஏழைகளுக்குப் பசி போக்கிட உதவ முடியும் என்றார் அன்னை தெரசா.அன்னை தெரசாவின் பேச்சு விழாக் குழுவினரை நெகிழ வைத்து விட்டது.அவரது வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு. விருந்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை முழுவதையும் அன்னை தெரசாவிடமே வழங்கினர்.

- தேனி.

இந்த இரு படங்களிலும் உள்ள வித்தியாசங்களைக் கண்டு பிடியுங்கள்






## நன்றியில்லையே

வாழும்போது
மேலேற,
ஏணியாய் இருந்து
ஏற்றி விடுகிறோம்...

இடை வாழ்வில்
இன்பம் சேர்க்க,
இசையாகிறோம்
புல்லாங்குழலாய்...

இவன் கதை
முடிந்த பின்னே,
பாடையாகிப்
பாரம் சுமக்கிறோம்...

நன்றியேயில்லை
மனிதனுக்கு-
எங்கள்
காட்டை அழித்து
வீட்டைக் கட்டுகிறானே...!



- செண்பக ஜெகதீசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயல்விழி

# மனசுக்குள் என்ன..?!



“என்ர ராசா நீ யார் பெற்ற பிள்ளையோ தெரியாது. நல்லாய் இருப்பாய்” கொடுத்த சாப்பாட்டை வாங்கிய படி ஆச்சி பாராட்டு றார். “ஏன் ஆச்சி சாப்பிடுங்கோவன்” “கன காலமப்பு இப்படிச் சாப்பாடுகள் கண்டு. நீ நல்லாய் இருப்பாய் ” மீண்டும் மீண்டும் ஆச்சியின் வார்த்தைகள் எங்களைப் பாராட்டுவதிலையே குறியாய் இருக்குதே தவிர கொடுத்த உணவை கையால் தொட்டுக் கூடப் பார்க்க முயலவில்லை. இதை அவதானித்த படியே அப்பால் நகர்ந்தேன்.

கொண்டு வந்த உணவுகள் பரிமாறப்பட்டு முடிந்ததும் மீண்டும் அந்த ஆச்சியிடம் சென்று.. " ஆச்சி போயிற்று வரப்போறம்" “என்ன பிள்ளை அவசரம். இஞ்ச கொஞ்சம் இரனப்பு” ஆச்சியின் கெஞ்சல் என் இதயத்தின் வாசல் வரை சென்று மனதை நெகிழச் செய்தது. “இல்லை ஆச்சி நேரம் போகுது. இங்கால பக்கத்திலையும் ஒரு இடம் போக வேண்டும்” “அப்ப போயிட்டு வா பிள்ளை. இஞ்சால திரும்பிப் போகேக்க போற வழியில என்னையும் ஒருக்கா வந்து பாத்திட்டுப் போ என்னப்பு” “நிச்சயமா ஆச்சி.. நேரம் கிடைச்சா வருவன். கவலைப்படாதேங்கோ இப்ப தந்ததைச் சாப்பிடுங்கோ ” என்றவன் திரும்பிப் பாராமலே நடந்தான்.

“என்ன பிரியன் ஆச்சிக்கு உன்னைப் பிடிச்சிட்டுது போல” “இல்லை மோகன்...” “ஆச்சிக்கு நாங்கள் கொடுத்த சாப்பாட்டை விட எங்களைக் கண்டது தான் மகிழ்ச்சியடா. அவாக்குள்ள ஏதோ பெரிய ஏக்கம் ஒன்று பொதிஞ்சிருக்குதடா. இப்படித்தான் அங்க இருக்கிற மற்றவைக்குள்ளும் இருக்கும்” என் ஏக்கம் கலந்த வினவல் மோகனையும் சிந்திக்க வைத்தது. “உண்மை தான் பிரியன் நானும் அவதானிச்சனான் தான்” “திரும்பி வீட்ட போகேக்க அங்க ஒருக்கா போயிட்டுப் போவமே?” “நேரம் இருந்தா போவம் பிரியன்” “ நீ இது பற்றி யோசிக்காதையடா. இது தாண்டா இப்ப உலகம். மோகன் சொல்லுறதும் சரி போலத்தான் தெரியுது. ஆனாலும், நிச்சயம் ஆச்சியைச் சந்திக்க வேண்டும். அவாக்குள் இருக்கிறதை அறிய வேண்டும்” என்ற உறுதியோடு சைக்கிளை மிதித்தேன்.

“வாங்கோ தம்பிமார் வாங்கோ. வருசம் என்டால் எங்களுக்கு பொழுது வராட்டிலும் நீங்கள் வந்திடுவியள் என்ற ஒரு எதிர்பார்ப்பு இருக்கிறது. உங்களைக் கண்டதில பெரும் மகிழ்ச்சி. பிள்ளைகள் இஞ்ச வாங்கோ யார் வந்திருக்கினம் என்று பாருங்கோ” இவ்வளவையும் வாசலிலேயே கேட்ட எங்களுக்கோ மகிழ்ச்சிக்கு மேல் மகிழ்ச்சி ஒருவேளை நாங்கள் வராமல் விட்டிருந்தால் அதை எண்ணி இந்த சிறுவர்கள் எவ்வளவு வருந்தியிருப்பார்கள். உள்ளத்தில் அவற்றை எண்ணங்களால் உணர்ந்தபடி.."வாங்கோ ரீச்சர் பிள்ளையளோட கொஞ்சம் கதைப்பம்” என்று கூறி இல்லத்துக்குள் நுழைகின்றோம். நாங்கள் ரீச்சரோடு இல்லத்துக்குள் நுழைந்ததும். “பிள்ளையள் அண்ணாமார் புது வருசத்துக்கு உங்களைப் பார்க்க வந்திருக்கினம். வணக்கம் சொல்லுங்கோ” இது ரீச்சர். அதற்குப் பிள்ளைகள் எல்லோரும் சேர்ந்து. “வணக்கம் அண்ணாக்கள்” என்றார்கள். அவர்களின் ஓங்கி ஒலித்த அந்த வணக்கம் ஒன்றே அவர்களுக்குள் எங்களைக் கண்டத்தில் எவ்வளவு பூரிப்பு என்பதைச் சொல்லியது. “ரீச்சர்.. நாங்கள் இவற்றைப் பிள்ளையளட்ட நேர கொடுக்க விரும்புறம். உங்களுக்கு ஆட்சேபனை இல்லைத் தானே” “என்ன இப்படிக் கேட்டிட்டீங்கள்.. நீங்கள் வருடா வருடம் எங்கட சிறுவர் இல்லத்துக்கு அன்பளிப்புகள் கொடுக்கிறனீங்கள் தானே. நீங்களே அன்பளிப்புகளை நேரே பிள்ளையளிட்டக் கொடுங்கோ. அப்பதான் அவைக்கும் மகிழ்ச்சியாக இருக்கும்” “நன்றி ரீச்சர் எங்கட ஆதங்கத்தைப் புரிஞ்சு கொண்டிருக்கிறீங்கள்”

குழந்தைகளிடம் நேரடியாக பரிசில்களை வழங்கிவிட்டு, கணணியை இயக்கி சிறார்களுடன் இணைந்து சில கணணி விளையாட்டுக்களை விளையாடிவிட்டு விடைபெற ஆயத்தமானோம். “தம்பி தங்கைகளா.. அண்ணாக்கள் போயிட்டு வரப்போறம்” இதைக் கூறி முடிப்பதற்குள்.. ஒரு சிறுவன் ஓடி வந்து.. “அண்ணா போகாதேங்கோ.. எங்களோட கணனி விளையாட ஆக்கள் இல்லை போகாதேங்கோ..” என்று ஏக்கத்தோடு கண்களில் நீர் ததும்ப கையைப் பிடித்துக் கொண்டான். “சீலன் அண்ணாக்கள் தூரத்த இருந்து வருகினம். இப்ப போயிட்டு பிறகு வருவினம். இஞ்ச தான் இருப்பினம். இப்ப போயிட்டு வரட்டும் என்ன. அதுவரைக்கும் ரீச்சர் சொல்லித்தாறன் கணணில விளையாட்டு எப்படி விளையாடுறது” என்று சரியா ரீச்சரிடம் இருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டுவிட்டு, அரை மனதோடு வலிந்து உருவாக்கிய நம்பிக்கையோடு சிறுவன் கையை விட்டு ரீச்சருக்கு அருகில் போய் நின்று கொண்டு ஏக்கத்தோடு பார்க்கத் தொடங்கினான். அவன் பார்வைக்காகவே அங்கு தங்க வேண்டும் போல் இருந்தது. “பாவம் அந்தப் பிஞ்சுக்குள் உணரப்படும் தனிமைக்கு யார் கொடுப்பார் ஆறுதல். பெற்றவர்களா..?? உறவினர்களா..??

வீட்டை நோக்கிப் பயணிக்க ஆயத்தமான போது.. முதியோர் இல்லத்து ஆச்சியின் எண்ணங்கள் வந்து மோதிச் சென்றன. “மோகன் வீட்ட போகேக்கை அந்த ஆச்சி யோட ஒரு நாலு வார்த்தை பேசிட்டுப் போவம் என்ன?” “என்ன பிரியன் ஆச்சியின் பாசம் உன்னை மிகவும் பாதிச்சிட்டுப் போல..” “சரி சரி போகேக்க ஒருக்கா போயிட்டுத்தான் போவமே”

சைக்கிள் முதியோர் இல்லத்தை நெருங்குகிறது. கண்கள் ஆச்சியைத் தேடத் தொடங்கின. ஆச்சி வாசலில் எங்களை எதிர்பார்த்த படி அதே சாப்பாட்டுப் பொட்டலத்தோடு காத்திருக்கிறார். ஆச்சியை அணுகி.. “என்ன எங்களை யோ எதிர்பார்த்து இருக்கிறீங்கள்?” “ஓம் பிள்ளை. உன்னைத்தான் எதிர்பாத்திருக்கிறன். எனக்குஒருஉதவிசெய்வியோபிள்ளை?” “என்ன செய்யனும் கேளுங்கோ ஆச்சி..”

எனக்கு ஒரே ஒரு மகள். இங்க ஊருக்குள் தான் கலியாணம் கட்டினவள். மாப்பிள்ளை வெளிநாடுபோய். இப்ப எல்லோரும் லண்டனில இருக்கினம். என்ர பேரப் பிள்ளையளும் இங்க தான் பிறந்தவை. அவையளை நான் தான் வளர்த்தனான் பிள்ளை. இப்ப லண்டன் போய் ஒரு கடிதம் கூடப் போடுறதில்லை. இங்க சண்டையில என்ர வீடு உடைஞ்சு போட்டுது. நான் அநாதையாக நிக்கிறன். எனக்கு ஊரில காணி பூமி இருக்கு. அங்கும் இப்பொழுது போக முடி யாது. அதுதான் நான் போக இடமில்லாது உறவினர்களும் கவனிக்காமல் விட இங்க வந்திட்டன் பிள்ளை.

“என்ர தங்கச்சிட மகன் செல்வராசா நல்லூரடியில் முத்திரைச்சந்தியில கடை வைச்சிருக்கிறான். அவன்ர பிள்ளையள் எல்லாம் லண்டனிலையாம் என்று அறிஞ்சன். அவையளுக்கு என்ர மகள் வீட்டோட தொடர்பு இருக்கும். அதுதான் ஒருக்கா இவன் செல்வராசாட்ட என்னைவந்துபார்த்திட்டுபோகச்சொல்லுறியோ பிள்ளை” என்று தன் ஆதங்கத்தை கொட்டிய ஆச்சி மீதியையும் தொடர்ந்தார்..

“என்ர மகள் காசு அனுப்ப வேண்டாம். நாலு வரியில ஒரு கடிதம் போடலாம் தானே. என்ர பேத்திமார், பேரன்மார் என்னை மறந்திட்டுதுகள். முந்தி இங்க இருக்கேக்க “அம்மாச்சி அம்மாச்சி” என்று முன்னும் பின்னும் காலுக்க நிண்டதுகள். இப்ப எல்லாம் மறந்திட்டுதுகள். அம்மம்மாக்கு எண்டு நாலு வரி எழுதக் கூட அவைக்கு நேரமில்லை. எனக்கும் எவ்வளவு ஆசைகள் இருக்கும். வயசு போன நேரத்தில என்ர பிள்ளை என்னைப் பராமரிக்கும் என்று சொல்லிச் சொல்லி வளர்த்தன். காலம் இப்படிச் செய்து போட்டுது பிள்ளை. என்னைஇனியார்பார்க்கப்போகினம்? நீ பாக்கிறாய் தானே பிள்ளை. என்ர கோலத்தை” என்று ஏக்கங்களோடு தன் சொந்த எதிர் பார்ப்புக்களை எல்லாம் சொல்லி முடித்ததும் ஆச்சியின் கண்களில் இருந்து கண்ணீர் கன்னத்தின் வழி வழிந்தோடியது.

“சரி சரி.. அழுதேங்கோ ஆச்சி. உங்களைப் போலத்தான் பல பேர் இங்கையும் இன்னும் கொஞ்சப் பேர் பிறநாட்டுக்குப் பிள்ளைகளை நம்பிப் போய் அங்கும் அநாதைகளா அன்புக்கும் பராமரிப்புக்கும் ஆளில்லாமல் தவிச்சுக் கொண்டு இருக்கினம். நிச்சயமா ஆச்சி உங்களுக்கு நான் உதவி செய்யுறன். உங்கட தங்கைச்சிட மகனைச் சந்திச்சு விபரம் சொல்லுறன். எதுக்கும் உங்கட விபரங்களைத் தாங்கோ” “ஓம் ராசா என்னைப் பற்றிச் சொல்லுறன் எழுதிறியோ பிள்ளை” “ஓம் ஆச்சி”

ஆச்சியிடம் விபரங்களைப் பெற்றுக் கொண்டு.. “ ஆச்சி நாங்கள் போயிட்டு வரப் போறம். நீங்கள் கவலைப்படாமல் இருங்கோ. சாப்பிடுங்கோ ஒழுங்காக. நாங்கள் உங்கள் மகளோட உங்களுக்கு தொடர்பு ஏற்படுத்த இயன்றது செய்வம்” “நீ யார் பெத்த பிள்ளையோ தெரியாது . என்னில இவ்வளவு பாசம் வைச்சிருக்கிறாய். என்ர சொந்தப் பிள்ளை என்னை மறந்திட்டுது” “சரி பிள்ளை. நீங்கள் கவனமாகப் போயிட்டு வாங்கோ. இஞ்சால வந்தா இந்த ஆச்சியையும் பார்க்காமல் போகாத பிள்ளை” “நிச்சயமா ஆச்சி. இங்கால வரமுடியவில்லை என்றாலும் ஒரு கடிதமாவது போடுவன். கவலைப்படாதேங்கோ” என்று உறுதிமொழி அளித்துவிட்டு ஆச்சியிடம் இருந்து நானும் நண்பன் மோகனும் விடைபெற்றுக் கொண்டோம். அப்போது கூட ஆச்சியின் கண்கள் பனித்தபடியே இருந்தது. நாங்கள் வெளியேறி மறையும் வரை ஆச்சி எங்களை நோக்கியபடி வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். எங்களைச் சந்தித்ததன் மூலம், தனக்குள் வைத்திருக்கும் சுமைகளில், கொஞ்சத்தை என்றாலும் இறக்கி வைச்ச சுகமாவது நிச்சயம் அவருக்குள் இருக்கும் என்ற நம்பிக்கையோடு அவருக்காக நான் முத்திரைச்சந்தி நோக்கி பயணிக்கலானேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளைத் தேடும்.....

( 03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரப்பட்டது. எனவே தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் முனையாக அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை ஜனநாயக வழிமுறைகளினூடாக முன்னெடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டது. தமிழ் மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது பேராதரவை வழங்கினர்.

ஆனால், மைத்திரி-ரணில் கூட்டு, மத்தியில் ஆட்சிக்கு வந்த பின்பு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலுள்ள ஒரு சிலரின் நடவடிக்கை தமிழ் மக்கள் மத்தியில் குழப்பங்களையும் , நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளன என்பதனைச் சுட்டிக்காட்டாமல் இருக்க இயலாது.

"விடுதலைப்புலிகள் ஒரு பயங்கரவாத அமைப்பு எனவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளை ஏற்றுக் கொள்ளவில்லை என்றும், விடுதலைப்புலிகள் முஸ்லிம்களை வடக்கிலிருந்து வெளியேற்றியமை ஒரு இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை எனவும் வெளிவந்த கருத்துக்கள் தமிழ் மக்கள் மத்தியிலும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தன.

இந்த நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில், கைதிகள் மீண்டும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியா போய் விட, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவுஸ்திரேலியாவுக்குப் போய்விட்டார். தமிழ்க் கைதிகள் ஒவ்வொரு நாளும் உண்ணாநோன்புப் போராட்டத்தில் சாவை நோக்கிப் பயணிக்க, அது பற்றிய பொறுப்பற்ற முறையில் தலைமை நாட்டுக்கு வெளியே போய் விட்டது.

எனினும் எமது மக்கள் தாயகத்தில் பரந்த அளவில் ஒரு வெற்றிகரமான ஹர்த்தாலை நடத்தினர். ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள் என நடத்தி ஹர்த்தாலை வலுவுள்ளதாக ஆக்க வேண்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஒரு அழைப்பை விடுத்ததுடன் தனது கடைமையை முடித்துக் கொண்டது. மாவீரர் அஞ்சலி தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஒரு காத்திரமான அறிக்கை கூட விடத் தயாராக இருக்கவில்லை.

ஆனால் அவர்களை மீறி, தடைகளுக்கு அஞ்சாது அஞ்சலி நிகழ்வுகளை மக்கள் நடத்தியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிறிதரன் ஆகியோர் நாடாளுமன்றத்திலேயே துணிச்சலுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் மக்கள் வெறுப்படைவதாகவும் திக்கற்ற நிலைமைக்குள் தள்ளப்பட்டதாகவும் உணர்வது தவிர்க்க முடியாததாகும்.

அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்தில் தமிழ் தலைமைகள் பொறுப்பற்ற போக்கைக் கடைப்பிடிக்கும் போதுதான் மாணவன் உயிர்க்கொடை மூலம் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளான். இந்த வழிமுறை தொடர்பான சரி, பிழை பற்றிய விமர்சனங்களுக்கு அப்பால் இப்படி ஒரு நிர்ப்பந்தம் உருவாவதற்கு தலைமைகளும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்.

# எதிரியும் அவர்களே.....

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழப்பம் நீடித்து வருகிறது.

யெமனிலும் இதே கதைதான். ஜன நாயகம் கேட்டு மக்கள் வீதிக்கு இறங்கி னார்கள். பல தசாப்தங்கள் ஆட் சியில் இருந்த அலி அப்துல்லாஹ் சலேஹ்வும் பதவி விலகி ஜனநாயகத் திற்கு வழி விடுவதாக பாசாங்கு செய்தார்.

ஆனால் இன்று அவர் ஹூத்தி ஷியா கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்து நாட்டை கைப்பற்ற முயற்சிக்க மறு பக்கம் சவூதிக்கு தலையாட்டு பொம்மை அரசொன்று எதிராக போராட ஜனநாயகம் கேட்ட மக்கள் அர்த்தம் இல்லாத சிவில் யுத்தம் ஒன்றில் சிக்கிக்கொண்டார்கள்.

இதுவெல்லாவற்றையும் விழுங்கிச் சாப்பிடும் அளவுக்கு சிரியாவின் பிரச்சினை பெரியது. சிறுபான்மை ஷியா முஸ்லிமான ஜனாதிபதி பஷர் அல் அஸாத் அரசை வீழ்த்த வீதிக்கு இறங்கிய பெரும்பான்மை சுன்னி முஸ்லிம்கள் கடைசியில் சிவில் யுத்தம் ஒன்றை சந்திக்க வேண்டியதாயிற்று. இப்போது பார்த்தால் அங்கு கண்டவர் குண்டு போட்டுச் செல்லும் சர்வதேச குண்டுத் தொட்டியாக மாறிவிட்டது.

இதிலே ஜனநாயக ஆதரவு இஸ்லாமியவாதிகளையே குறிப்பிட்டுச் சொல்லவேண்டி இருக்கிறது. அரபு எழுச்சி போராட்டத்திற்கு பின்னர் இடம்பெற்ற உண்மையாக மக்கள் வாக்களித்த தேர்தல்களில் இந்த இஸ்லாமியவாதிகளே வெற்றி பெற்றார்கள்.

எகிப்தில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் வெற்றி அல் கொய்தா போன்ற இஸ்லாத்தின் பெயரால் முரட்டுத்தனமாக போராடும் குழுக்களின் மிகப் பெரிய தோல்வியாக இருந்தது. உண்மையில் இந்த தீவிரப் போக்குடை யவர்களுக்கு ஜனநாயகத்தை நம்பும் இஸ்லாமியவாதிகள் தான் சரியான மாற்றாக இருந்தார்கள்.

ஆனால் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் வெற்றி அல்கொய்தா போன்றவர்களுக்கு மாத்திரமன்றி சவூதி அரேபியா உட்பட பிராந்தியத்தில் இருக்கும் சர்வாதிகார நாடுகளுக்கும் பயத்தை ஏற்படுத்தியது. அதேபோன்று மேற்குலம் மற்றும் இஸ்ரேலும் தொடை நடுங்கின.

எனவே இஸ்லாமியவாத ஜனநாயக விரும்பிகள் அனைவரினதும் ஒத்து ழைப்போடு துரத்தியடிக்கப்பட்டார்கள். எகிப்தில் நடந்தது அதுவே. துனீஷியா வில் அரசியல் குழப்பம் விளைவித்த இஸ்லாமியவாதிகளான அன்னஹ்தா கட்சியினர் ஆட்சியில் இருந்து விரட்டப்பட்டார்கள். லிபியாவிலும் ஓரளவுக்கு அப்படியான சூழல் இருந்தது.

எனவே பழையபடி சர்வாதிகாரிகள் அதிகார நாற்காலியில் காலுக்கு மேல் கால்போட்டு அமர்ந்தார்கள். மேற்குலகம் ஆறுதல் அடைந்தது. இஸ்ரேலின் முயற்சி பழித்தது. இந்த கட்சியில் கடும்போக்கு இஸ்லாமியவாதிகளையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த செயலால் உண்மையில் இந்த ரக இஸ்லாமியவாதிகள் தான் வெற்றிபெற்றார்கள்.

இவர்களுக்கு முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பே பெரும் எதிரியாக இருந்தது. ஆனால் இப்போது ஜனநாயகத்தால் இஸ்லாத்தை கொண்டுவர முடியாது என்பதை நிரூபிக்க கடும்போக்காளர்களுக்கு சூழல் ஏற்பட்டது.

தேர்தலில் வென்றாலும் நாட்டில் இஸ்லாமிய ஆட்சியை கொண்டு வர விடமாட்டார்கள் என்பதற்கு முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் ஆட்சி கவிழ்ப்பு இந்த கடும்போக்கு இஸ்லாமியவாதிகளுக்கு நல்லதொரு உதாரணமாக போய்விட்டது.

இவ்வாறான நம்பிக்கை இழந்த சூழலிலேயே ஐ.எஸ். குழுவின் எழுச்சி ஈராக்கின் மொசூல் நகரில் ஆரம்பமா னது. இந்த இரண்டு சம்பவத்தையும் தொடர்புபடுத்தி பார்த்தால் விடுபட்ட பகுதிகள் தெளிவாக தெரிந்து விடும்.

அதாவது மத்திய கிழக்கில் ஜனநாயகம் தோற்ற பின் மக்கள் மாற்று தீர்வு தேடிய போதுதான் ஐ.எஸ். மொசூலில் தனது பயணத்தை ஆரம்பித்து ஒருசில மாதங்களுக்குள் சிரியாவின் ரக்கா நகர் வரை வந்து பெரியதொரு நிலத்தை கைப்பற்றி அதற்கு பம்மாத்தாக இஸ்லாமிய கிலாபத் என்று பெயரும் வைத்துக் கொண்டது.

ஐ.எஸ்ஸின் தோற்றத்திற்கு நேரடி பங்குதாரர்கள் யார் என்று பார்த்தால் அங்கு அமெரிக்கா இருக்கும், ஐரோப்பா இருக்கும், இஸ்ரேல் இருக்கும் மத்திய கிழக்கு சர்வாதிகாரிகள் இருப்பார்கள்.

தர்க்கம் போட்டு சொல்வதென்றால் ஐ.எஸ்.இருப்பதால் மேற்சொன்ன தரப்புகளுக்குத் தான் இலாபம் அதிகம் ஆனால் ஐ.எஸ்ஸின் கோணத்தில் இருந்து பார்த்தால் அது தனது இருப்பை தக்க வைத்துக்கொள்ள வேண்டுமானால் அது மேற்சொன்ன தரப்புக்களுக்கு எதிராகத் தான் சண்டை போட வேண்டும்.

அதன் விளைவே பாரிஸ் தாக்குதல் மற்றும் ஐரோப்பாவில் இன்று ஏற்பட்டிருக்கும் பதற்றம். அதாவது ஐ.எஸ்ஸின் இந்த தாக்குதல் எல்லாம் வெறுமனே ஒரு சந்தைப்படுத்தல் உத்தி.

இந்த குழப்பதை சரியாக புரியும்படி சொல்வதென்றால் எதிரிகளும் அவர்கள்தான் நண்பர்களும் அவர்கள்தான்.. என்றே விளக்க வேண்டும்.

-எஸ். பிர்தௌஸ்-

# புத்தரின் பெயரால்.....

( 09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் தமிழ்ப் பெயரில் உள்ள சொல்லுக்குச் சமமான சிங்களச் சொல்லைப் பதிலிட்டு மொழிமாற்றம் செய்துள்ளார். 'அனல்' என்ற தமிழ்ச் சொல் 'அக்னி'யைக் குறிப்பது என்பதை அறிந்து இருந்த 'நம்பொத்த' ஆசிரியர், 'நயினார்', 'நாகநயினார்' என்பன நாகதேவனைக் குறிக்கும் பெயர்கள் என்பதையும் அறிந்து இருந்திருக்கலாம். ஆகவே, பதினைந்தாம் நூற்றாண்டில், நயினாதீவுக்கு வழங்கிய தமிழ்ப் பெயர் நாகதீவு, நயினார்தீவு, நாகநயினார் தீவு - இவற்றில் எதுவாகவும் இருந்திருக்கலாம் என்பதே நம்பொத்த' மூலம் நமக்குத் தெரியவருகின்றது.


மணிபல்லவம் என்ற பெயரும் நாகதீபம் என்ற பெயரைப் போன்று முழு யாழ்ப்பாணக் குடாநாட்டையுமே குறிப்பதாக வழங்கப்பட்டது என்பது நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் சி. இராசநாயகம் ஆகிய அறிஞர் பெருமக்களது கருத்தாகும். போல் பீரிஸ், பரணவிதான போன்ற சிங்கள தொல்பொருளியல் அறிஞர்களும் இதே கருத்தையே வெளியிட்டுள்ளனர்.

1939 இல், நயினாதீவில் சிங்கள புத்த பிக்கு ஒருவர் வந்து, தெருவெங்கும் சுற்றித் திரிந்தார். மர நிழலில் படுத்து உறங்குவார். 'ஒரு நாளுக்கு ஒரு வீட்டில்' என்று முறை வைத்துப் போய் உணவு பெற்று உண்பார். சில ஆண்டுகள் செல்ல, நயினை திரு. இளையவர் கந்தர் என்பவர் திரு.நல்லதம்பி என்பவருக்கு ஈடுவைத்து நீண்டகாலமாக மீட்காமல் விட்டிருந்த சிறு துண்டுக்காணி ஒன்றை நல்ல விலை தந்து தான் வாங்கிக்கொள்வதாக காணி உரிமையாளரிடம் (திரு. இளையவர் கந்தர்) ஒரு ரூபாவை முற்பணமாகக் கொடுத்துவிட்டு திடீரென்று ஒருநாள் அந்த பிக்கு வெளியூர் புறப்பட்டுப் போனார். சில நாட்களில் அவர் திரும்பிவந்து, கணிசமான விலைக்கு அக்காணித் துண்டை வாங்கி, சில வருடங்களில் புத்த தாதுகோபம் ஒன்றை 1944 இல் நயினாதீவில் அமைத்தார். சிங்கள யாத்திரீகர் வருகை இந்தக் காலகட்டத்திலேயே முதன்முதலாக நயினாதீவில் இடம்பெற ஆரம்பித்தது. இதற்கு முன்னர் நயினாதீவில் தமிழ்ப் புத்தர் கோவில் ஒன்று இருந்திருக்கலாம். அல்லாமலும் இருக்கலாம். நயினாதீவு அல்ல - யாழ்ப்பாணக் குடாநாடுதான் மணிபல்லவம்' எனவும் நாகதீபம்' எனவும் அழைக்கப்பட்டது என்பது நிறுவப்பட்டுள்ள நிலையில், இதனை எவரும் திட்டவட்டமாகக் கூறுவதற்கு முடியாது. ஆனால், இங்கே சிங்கள வர்களது புத்த விகாரை இருந்ததற்கான எவ்வித ஆதாரமும் இல்லை.

இப்படிப்பட்ட நிலையில் இன்னொரு வரலாற்றுபுனைவை ஏற்படுத்தி, நயினா தீவு அம்மனை விடவும் நாகதீப புத்தரையே முதன்மைப் படுத்தி சிங்கள ஆதிக்கத்தின் கீழ் நயினாதீவு கொண்டுவரப்படுவதை வேடிக்கை பார்ப்பது இனியும் பொருத்தமாகாது. வடக்கு மாகாணசபையின் தீர்மானத்தை நடைமுறைக்கு கொண்டுவருவதன் மூலமே இனியும் வரலாற்றுப் புனைவுகள் ஏற்படாதிருக்க வழி செய்ய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள எக்ஸ்பிறஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேற் லிமிட்டெட் ஸ்தாபனத்தால், 2015 டிசம்பர் 02ஆம் திகதி வெளியிடப்பட்டது.